MSV 87

270

270

ஸ்ரீ எம்.பெருமாள் சேர்வை,
மோகனூர், நாமக்கல்,
சேலம்.
"வைத்திய அட்டவணை கட்டு-1".

z/z.

2ம் typed copy.

தேதி: 19.3.64.
ஓலைச் சுவடியின் பெயர்:- வைத்திய அட்டவணை கட்டு-1.
உரிமையாளரின் பெயர்: எம்.பெருமாள் சேர்வை.
இடம்: கோகனூர், நாமக்கல் தாலுகா, சேலம்.

270

***

(முக்காவேளை * வேலிப் * பருத்தி * கஞ்சாங் * கோரை *
மணி கிடட சாத்திரம்:- இதனுள் நாடி, நோய்க் குணம், நோயின் பெயர்கள், மருந்தின் பேர்கள் இவை முதலான அட்டவணைகள் வகுத்து மருந்து செய்முறை ஆகியவைகள் மட்டும் பிரதி செய்யப்பட்டுள்ளன).

***

வாத_சுரத்துக்கு:-

முக்காவேளை, வேலிப் பருத்தி கஞ்சாங் கோரை, கந்தாமுந் சருகு முடக் கொத்தான் கடுக்காய், சுக்கு சிறு தேக்கு, சிறுகாஞ் சொறி வேர், வேப்பம் பட்டை யிர்க்கு வகைக்குச் சமன் கசாயம்.

பித்த சுரத்துக்கு:- சீந்தி முத்தக் காசு, பற்படாகம், விலாமிச்சம் வேர், வெட்டி வேர், சந்தனம், சுக்கு, சித்தா முட்டி கசாயம்.

ஐய்ய_சுரத்துக்கு:-

ஆடாதோடை சிறுதேக்கு, சைய்யாந்தகரை சங்கம் வேர், சுக்கு, மிளகு கசாயம்.

வாத_சுரம்,_பித்த_சுரம்,_ஐய்ய_சுரம்_கசாயம்_பாட்டு:-

ஆமப்பா சுர மென்ற தரபத்து நாலு மப்பனே வாத சுரமு முப்பத்திரண்டும்
போமப்பா பித்த சுமிருபத் தொன்றும் புகழான சிலேட்டும சுரம் பதினென்றப்பா
நாளப்பா வகை மூன்று மறுபத்தி ருவம் நலமான வாத சுரங் கசாயங் கேளே
வெம்பப்பா சிறு தேக்கு திப்பிலியும் விதமான செவியமொடு கோஷ்டந் தானே.

தானென்ற தார பிலைப் பை திப்பிலி மூலம் தளமான சித்திர மூலஞ்
சங்கு வேவென்ற வெள்ளருகு நிலவேம்போடு விருதான முருக்கன் வேர் கழச்சி வேருங்
காளென்ற கண்டங் கத்திரி பேரு முட்டி கருவான சித்தரத்தை மாலகம் வேரு
தேனென்ற பேரரத்தை சிறுகாஞ் சொறி சேரு சதகுப்பை விஷ்ணு கிராந் பாரே.

பாரப்பா யிந்த வகை யிருபத்தொன்றும் பல விதமாய் நருக்கியே யிடித்து நய்யச்
சேரப்பா யிருபத்தோர் பங்கு பண்ணித் திரமாக ஒரு பங்கு சட்டியிட்டு
வாரப்பா மூன்று சேர் சலந்தான் விட்டு வலமான நாழிகை தான் முப்பதானால்
பாரப்பா வடுப்பேத்தி காற் சேற சேருமுல் அப்பனே வடி கொண்டு பீங்கானில் வாரே.

வார்த்தப்பா வாத குட்சதக் குளிகை வளமாகப் பணமொன்று பொடித்துப் போட்டு
தேத்தப்பா தேனதிலே காஞ்சி குத்தித் திரமாக யிரு நேரங் கொடுத்தாயானால்
பாரப்பா வாத சுரம் நடுக்கு வாதம் பத்து நாலா முறையும் பறந்சு போகும்
காத்தப்பா கடுப்பு வலி கடலே புக்குங் கருவான பித்த நோய்க் கசாயஞ் கேளே.

பித்த_சுர_கசாயம்:-

கேளப்பா பித்த சுர மிருபத் தொன்சம் கெடியாகத் தீருமடா கசாயத் கேளு
நாளப்பா விலச்சு சிறுகாஞ் சோறி நலமான வில்வ வேர் பாதிரி வேர்
ஆளப்பா செவ்வல்லி மதுரம் கோஷ்டம் அப்பனே நன்னாரி ஆவாரை
சேரப்பா சீரகமும் கொந்த மல்லி திரமான நமைபை வேர் பேரீச்சங் காய்.

காயோடு ஆனைத் திப்பிலியுமப்பா கருவான நெல்லி முள்ளி சுக்கோடப்பா
பாயோடு பல விதம் பதினைந்தாக்கிப் பக்குவமா யிடித்து நய்யப் பாண்டத்திட்டு
சேயோடு சலமதிலே மூன்று சேர் தான் திரமாக விட்டதிலே அடுப்பி லேத்தே
ஏத்தப்பா நாழிகை தான் முப்பதானால் எடுத்துப் பார் காற் சேர் தானெடுத்துச
சேத்தப்பா தேனதிலே காஞ்சி கட்டி தீர்த்தக் கோரோசினையாங் குளிகை யொன்று
பாரப்பா யிழைத்த தனை யிரு நேரந் தான் பதமுமல் கொடுத்திட வரப் பித்த மெல்லாம்
காத்தப்பா கண் காசு தோடிப் போகும் கருவான நாவறட்சி பேத்தல் போமே.

போமப்பா நாக்கிலுள்ள முளைகளெல்லாம் பொருக்காத நீர்த் தாகம் போகும் சொன்
னேன்

நாமப்பா உடம்பெரிபு காந்த லெல்லாம் நடு நடுக்கி போகும் வாயுற லெல்லாம்
போமப்பா சிரசிலுள்ள பித்த மெல்லாம் சீக்கிரத்தி லிறங்கியே விடும் சிரசில் பாரம்
தீருமப்பா சிலேட்டும சுரம் பதினென்றந் தான் தீரு ம்டிக் கசாய மொன்று சொல்லக்
கேளே.

சிலேட்டும_சுரக்_கசாயம்:-

கேளப்பா சுக்கு திப்பிலி கிராம்பு கெடியான துராயிலைப்பை யக்கிரகாரம்
காளப்பா கரி முள்ளி கடுக்காய் யோடு கனமான ஆடா தோடை கற்பூர வல்லி
நாளப்பா முந்திரிகை கண்டங் கத்திரி நலமான பதினென்று வகையைக் கேளு
வாளப்பா பலம் வீதம் நிறுத்துக் கொண்டு அப்பனே யிடித்து நய்யப் பங்கே

போடப்பா கோரோசினையாங் குளிகை யொன்று புகழாகக் கலிக்கி யதை யிரு நேரங்
கொள்

நாமப்பா கப மெல்லாம் சீமே சாகும் நலமாகச் சிலேட்டும சுரம் நாடாதோடும்

சாடப்பா யிருமலெல்லாம் சனத்தில் தீரும் கருப்புக் குத்து வலி சேராகோடும்
காடப்பா வலி யிசிவு கலசில் போகும் கருவான சேதி பொய்ரா சொல்லக் கேளே.

<u>குளிர் சுரத்துக்கு</u>:-

வேலிப் பருத்தி யிலை.9, பூண்டு மூன்று, மிளகு.12, இது வெல்லாங் கூட்டி அரைத்துச் சாப்பிடவும். தும்பை யிலைச் சாறு படி.¼ கூட்டியைக் காய வைத்து முரிக்க வடிகட்டி அரத்தையைச் சுட்டுப் பொடி பண்ணி விராகனிடை.உ; சாத்தில் போட்டு சாப்பிடவும்.

<u>மூன்று வகைச் சுரத்துக்கு</u>:-

சுக்கு, திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம், சிறு தேக்கு, நிலவேம்பு, கோஷ்டம், மல்லிகை, சதகுப்பை, விலாமிச்சம் வேர், சித்தா முட்டி வேர், வில்வ வேர், பேய்ப்புடல், கோரைக் கிழங்கு, தூதுவளை, வேர், கண்டங் கத்திரி வேர் சமன் யிடித்து மூன்று பங்கு பண்ணி பங்கு ஒன்றுக்கு ஒரு படி தண்ணீர் விட்டு வெட்டி லொன்றாய்க் காய்ச்சி நூறு வேளை சாப்பிடவும். முதல் நாள் தரம் பேதியாகும் மறுபடி பேதிக்குக் கொடுப்பது பிரமி வழுக்கை யிலைக் கடுக்காய்.3, களிப்பாக்கு.3 சுக்கு.3, சாறணை வேர்.3, சுத்தாளஞ் சமுகு.3, இந்துப்பு விராகனிடை.க, கசாயம் சாறணை வேர், வழுக்கை யிலை, கத்தாழஞ் சருகு இந்த மூன்று தவிர மற்றதைத் தெளிய வைத்து யிஞ்சி சாற்றில் கலக்கிக் கொள்ளப் பேதிக்கும். சுரமும் வாய்வு தீரும்.

<u>குளிர் சுரத்துக்கு</u>:-

தும்பை, கருதும்பை, யிலையைச் சமனுப் பிட்டு வைத்து பிட்டுக் குள்ளே கிராம்பு திப்பிலி முடிந்து வைக்கவும். மறுபடி பிட்டுச் சாத்தில் அரைத்து மூன்று நேரங் கொடுக்கவும். ஆடாதோடை பேய்ப்புடலடருஞ் சீந்தில், பற்படகம், நீடா கண்டங்கத்திரி வேர் நிலவேம்புடன் நிறைந்த சுக்கு வாடா குடி நீர் ரெட்டி லொன்று வடித்துத் தேனில் கொள்வீராய் கோடா கோடி சுரங்கள் விட்டு குளிருந் தாகம் சுரந் தீரும்.

<u>அஸ்தி சுரத்துக்கு</u>:-

சர்க்கரை பலம்.உ, மாஎம் பலம்.க, மாதளம் பிஞ்சு பலம்.க, மேற்படி பட்டை பலம்.க, மேற்படி கொழுந்து பலம்.க, பற்படாகம் பலம்.ட இது வெல்லாம் நெய் விட்டு வேகவைத்து அரைத்துச் சர்க்கரையைக் கூட்டி லேகியமாகச் சாப்பிடவும். அந்திர சந்தி யெலுமிச்சங் காயளவு சாப்பிடவும். குப்பை மேனியிலை, தும்பை, சமூலம் கருக்கித் தடைத்த சட்டியில் மிளகு கருக்கி வெந்தியம் ஓமம் வறுத்து கசாயம்.

<u>சகல சுரங்களுக்கு</u>:-

சித்தர முட்டி வேர், பேருமுட்டி வேர், காஞ்சொறி, விஷ்ணு கிராந்தி, பற்படாகம், வில்வ வேர், முசுமுசுக்கை நிலவேம்பு, முள்ளி வேர், முக்கா வேளை, சீந்திக் கொடி, கோரைக் கிழங்கு, விளா வேர், தூதுவளை, சுக்கு, அரத்தை, திப்பிலி மூலம், செவியம், சிறுதேக்கு, மல்லிகை, சீரகம், கிராம்பு வகைக்கு பலம்.¼ எடை மருந்தையும் வேறே யிடித்துக் கொண்டு வேளைக்குக் காட்டு மருந்திலே மூன்று விரல் கொண்டது கசாயம் வைத்துச் சாப்பிடவும்.

சுரத்துக்கு:- மாதளைவேரோடு வேர், பற்படாகம், சிறுகாஞ்சொறி வேர், ஆடாதோடை, சீந்தி, கண்டங்கத்திரி வேர் இந்த வகைக்கு எடை மருந்து சிறு தேக்கு, சுக்கு, நிலவேம்பு, செங்கழுநீர், கோஷ்டம், அதிவிடயம், திப்பிலி இது வெல்லாம் சமனுச் சேர்த்து கசாயம்.

தாபசுரத்து: முக்கா வேளை சக்கு வறுத்துக சசாயம்.

கற்கடி சுரத்துக்கு:- சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம் அரைத்து இஞ்சி சாத்தில் கலக்கி கொடுப்பது.
மாந்த கணை சுரத்துக்கு:- சீந்தி கடுக்காய், சிவதை வேர், களிப்பாக்கு, சுக்கு, கடுகு ரோகணி, கத்தாழஞ் சருகு கசாயம்.

<u>பேதி மேல் சுரத்துக்கு</u>:-

பொன் முசுட்டை வேர், முத்தக் காசு, அத்திப் பட்டை, நீர்ப் புலா வேர், நாவல் பட்டை, மாவிலிங்கம் கொழுந்து, மஞ்சு வெட்டி வேர், விலாமிச்ச வேர், அதிவிடயம், மதுரம், கோஷ்டம், சீரகம் கசாயம்.

<u>சுரத்துக்கு சாமியார் சூரணம்</u>:-

கோஷ்டம், மதுரம், பேரீச்சம் பழம், ஏலம், லவங்கப் பட்டை, சீரகம், சாதிக்காய், கிராம்பு, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், நன்னாரி வேர் கோரைக் கிழங்கு வகைக்கு விராகனிடை.க, இவ வரப்புச் சூரணம் சர்க்கரை பலம்.3 கூட்டிச் சாப்பிடவும்.

<u>வாய்வுக்கு</u>:-

இஞ்சி மேல் தோல் போக்கிக் கண்டங் கண்டமாய் நருக்கி வெந்நீர் பொங்கப் பொங்கக் காய வைத்து அதிலே போட்டு ஒரு நாழிகை கொதிக்க வைத்து எடுத்துக் குழம்பு மோரில் ஒரு நாளூற வைத்து எடுத்து மறு நாள் சூரிய புடமாக வைத்துக் காய்ந்த பிறகு எடுத்து வைக்கவும். மறுபடி ஊற வைத்துக் காய வைக்கவும்.

உபத்தரிய மறித்து கொடுக்கவும்.

<u>வாய்வுக்கு லேகியம்:-</u>

நெல்லிக்காய்ச் சாறு படி.6, சர்க்கரை சேர்.க, திரிகடுகு, ஏலம், கிராம்பு, தாளிச பத்திரி, சீரகம், முந்திரிப் பழம், சொடிவேலி, லவங்கப் பத்திரி, கூகை நீர், அறகுகம், தேசவாரம், திப்பிலி மூலம், செவியம், கொத்தமல் ஆக வகைக்கு பலம்.க, சிவதை வேர் சுத்தி பண்ணி பாதிலில் மருந்தில் போட்டு சாத்தை அடுப்பில் வைத்து சர்க்கரை போட்டுக் கிண்டவும். பாகு பதத்தில் மருந்துப் பொடியைப் போட்டுக் கிண்டி எடுத்து வைக்கவும். அந்தி சந்தி சாப்பிடவும். பொரித்த ரசம் விட்டுக் கொள்ளவும்.

<u>வாய்வுக்கு:-</u>

திரிகடுகு, தேசவாரம், வசம்பு, ஓமம், சதகுப்பை, இந்துப்பு, காயம், பனை வெல்லம், சங்கிலை, கொண்டு வந்து இடித்துச் சாறு பிழிந்து நாழிச சாத்தில் பூண்டை உரித்துப் போட்டுப் பூண்டு வெந்த பிறகு அகப்பையாலே கடைந்து கடை மருந்துப் பொடியைப் போட்டு வெந்து வருகிற பதத்தில் வெல்லம் நெய், நல்லெண்ணெயும் விட்டுக் கிண்டி வைத்துச் சாப்பிடவும்.

<u>உஷ்ண வாய்வுக்கு:-</u>

சுக்கு, உள்ளி, திப்பிலி, முக்காவேளை வேரு, வேருய் வஸ்திர காயம் பண்ணிச் சேர்த்துக் கொடுக்கவும். இறங்கு தீரும் வியாதி கால் குத்து, வலிப்பு, இசிவு ஏக்கம் கடும் பித்தம் இவை தீரும்.

<u>ஊஷ்ண வாய்வுக்கு:-</u>

சுக்கு, உள்ளி, திப்பிலி, முக்காவேளை, ஓமம் படி¼ வாங்கி வந்து, கையான் சாறு விட்டுப் பிசறி நிழலிரண்டுதி முசுமுசுக்கை சாறு பிழிந்து அதில் மேற்படி ஓமத்தை பிசறி நிழல் காச்சலாக வைத்து வெல்லம் பாகு செய்து அதில் போட்டுக் கிண்டி வைத்துக் கொள்ளவும். கொண்டு தினம் மூன்று களச்சிக் காயளவு சாப்பிடவும். பசியில்லாத வாய்வு, கெற்ப வாய்வு தீரும்.

இஞ்சி சேர்.க, திரிகடுகு, மல்லிகை, வாய்விளங்கம், சிறுநாகப்பூ, வால் மிளகு, கூகைநீர், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி, சீரகம், கிராம்பு, ஏலம், ஆனைத் திப்பிலி வகைக்கு பலம்.½ சர்க்கரை பலம்.௮ இஞ்சியைப் பாக்குப் போலே சீவி நறுக்கி பசுவின் நெய்யில் வறுத்துப் பொடியாகிற பக்குவத்தில் எடுத்துக் கொண்டு சர்க்கரையும், தாளழயும் நெய்யில் போட்டுப் பிரட்டி வைத்துச சாப்பிடவும்.

<u>குதச வாய்விக்கு:-</u>

பொடுதலை பிடி.க, கொண்டு வந்து எருமைத் தயிலரைத்துக் குளப்பிக் கொடுக்கவும்.

<u>பொருட் வாய்வுக்கு:-</u>

சுக்கு, கருவேப்பிலை, உப்பு, சுண்ட வத்தல் வகைக்கு சமன் கூட்டி இள வறுப்பாய் வறுத்து பொடி பண்ணி வஸ்திர காயம் செய்து நெய்யைப் பர்சப் பக்கக் காச்சி மேற்படி தூள் போட்டு சோத்தில் விட்டுப் பிசைந்து சாப்பிடவும். தீக்கு தீரும் வியாதி உப்பிசம், இரைச்சல், நெஞ்சு, கரிப்பு, வாய்வு இவை யெல்லாந் தீரும்.

<u>மூல வாய்வுக்கு:-</u>

சுக்கு, திப்பிலி, கஞ்சாவுஞ் சொல்லாலப் பெரிய பெருங்காயம்
தக்க புகழ் சேர் சாதிக்காய் சாதிப் பத்திரி யதிவிடையம்
இக்குள வெல்லம் பலம் ஒன்று இனி பசுவின் நெய்யுழக்கு
புக்கவ தன்னில் கரை சேரும் வாழும் கிராம்பு தன்னிலதை.
அக்கு நிறம் போல் சுக்கெழுந்து அமர்த கடுக்காய் விரை போக்கி
ஒக்கக் கூட்டிக் குளம்பாக்கி இறக்கியே விராகனிடை கொள்வீராகில்
துக்க மில்லை சுகமுண்டு சொன்னேன் மூல வாயு வரம்.

<u>புகை:-</u>

ஈர வெங்காயத்தை, யெருக்கு விதைப்பை ஏன்க்கை பொடித்து ரெண்டுங் கலந்து புளியம் பறனியில் பத்ர வைத்து ஒரைத்த ஈ ரில் ஒட்டையாலே புகை பிடிக்க தீரும்.

<u>வயத்துக் கடுப்புக்கு லேகியம்:-</u>

அதிவிடையம், ஓமம், இரண்டும் முடிந்து தண்ணீரில் அவித்து ஊதைப் பிழிந்து தேன்கூட்டிச சாப்பிடவும்.

<u>ரெத்தக் கடுப்புக்கு சீதக் கடுப்புக்கு:-</u>

வெள்ளாட்டு பால் படி.½, காய்ச்சி பூண்டு உரித்துப் போட்டு வெந்த பிறகு சுக்கு, கடுக்காய், கிராம்பு இவ வெல்லாம் பொடி பண்ணிப் போட்டு பனைவெல்லம் உடைத்துப் போட்டு பதமாக லேகியம் செய்து அந்தி, சந்தி சாப்பிடவும். ஈர வெங்காயம் படி.½, பால் படி.½, அரிந்து போட்டு சுண்ட வைத்து விட்டு எடுத்து சாப்பிடவும்.

<u>ரத்தசீதக் கடுப்புக்கு:-</u>

சுக்கு காடியிலரைத்துச் சாப்பிடவும். வெண்ணெயும் சாப்பிடவும். சாதிக்காய் அதிவிடையம், குரோசாணி ஓமம், அசமதாகம், அபின், கருஞ்சீரியம் வகைக்கு ஒவ்வொன்றும் இளப்பு சூரணம் பண்ணி வைக்கவும். கடுப்புக்கு விரல் கொடுக்கவும். மிளகு

நெய் வார்த்து நல்ல வெல்லமு மரைத்துக் குழப்பிச் சாப்பிடவும்.

<u>மூலக் கடுப்புக்கு:-</u>

அரை வீசம்படி, வெந்தயம் வறுத்து அரைப்படி தண்ணீர் விட்டு அதில் அதிவிடையம், கிராம்பு, பொட்டணங் கட்டிப் போட்டு வீசம்படி கசாயத்தில் அரைத்துக் கொடுக்கவும். அத்திப்பால் உழக்கு, புளியங் கொட்டைத் தோல் காசுக் கட்டி, நல்லெண்ணெ வார்த்து அரைத்துச் சாப்பிடவும். வெள்ளாட்டுப் பால் படி, பசுவின் பால் படி.¾ காச்சி அரசம் பட்டை இடித்துச் சாறு புளிந்து வடி கட்டி பாலில் விட்டுக் காச்சி சாப்பிடவும்.

புளியங் கொட்டை ஊற வைத்து தயிரிலரைத்துக் குழப்பிச் சாப்பிடவும்.

<u>வயுத்துக்கு கடுப்புக்கு:-</u>

நல்லெண்ணெ படி.1/1 , அத்திப் பால் படி.1/16 கலந்து சாப்பிடவும். மூலக் கடுப்புக்கு விளங்கு கிராந்தி பிடி கொண்டு வந்து கார்போகரிசி, அரைத்து பசு நெய்யில் தட்டு அகலம் மூன்று அட்டி சாப்பிடவும். இந்தப் படி மூன்று நாள் சாப்பிடவும். மூல முளைக் கடுப்பு வாய்வு இவை தீரும்.

<u>வயுத்துக் கடுப்புக்கு:-</u>

சீரகம் விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.க, யேலம் விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, திப்பிலி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க, அதிவிடையம் விராகனிடை.க, ஓமம் விராகனிடை.க, அபினி விராகனிடை.க, கிராம்பு விராகனிடை.க, சாதிக்காய் விராகனிடை.க, கடுகு விராகனிடை.க, சாதிபத்திரி விராகனிடை.க, மாதளங்காய் துளைத்து மருந்தை மோர் விட்டு அரைத்துக் காயில் செலுத்தி சீலை மண் செய்து புடமிட்டு வெந்த பிறகு மோர் விட்டரைத்து ஊட்டி மோரிலாவது, தயிரிலாவது கொடுக்கவும்.

<u>வயுத்து கடுப்புக்கு:-</u>

பொன் முசுட்டை வேர், மாதளங்காய் ஓடு, இஞ்சி நருக்கி மிள வறப்பாய் வறுத்து ஓமம் கூடப் போட்டு வடி கஷிட்டு இலவம் பிசின் போட்டுச் சாப்பிடவும். கருவேலம் பட்டை தண்ணியில் சீரக மரைத்துக் கொடுக்கவும். பருத்திக்காய், கிராம்பு, அதிவிடையம், அசமதாகம் இது வெல்லாம் அரைத்து தயிரில் குழப்பிச் சாப்பிடவும்.

<u>க்ஷயரோகங்களுக்கு அய செந்தூரம் இருமலுக்கு:-</u>

அயம் பலம்.55 , எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைப்புச் சாமம் நாலு ஓட்டில் வைத்து யேழு சீலை மண் செய்து பதினைந்து விரட்டியில் புடம் போடவும். இந்தப் படிக்கு பதினைந்து விரட்டியில் வைத்து 11 புடம் இதுக்கு அநுபானம் அறிந்து கொடுக்கவும். இருக்கு தீரும் வியாதி க்ஷயம், குன்மம், மேக முதலான ரோய் கருந் தீரும்.

<u>இருமலுக்கு:-</u>

ஆவாரைக் கொழுந்து, தேசிச் சாத்தில் கொடுக்கவும். தேத்தாம் விரையைச் சீவிப் பாக்கு வெத்திலை கூட்டி பதினொரு நாள் தின்னவும்.

<u>வாயிலே ரெத்தம் விழுகிறதுக்கு:-</u>

ரச கற்பூரம் விராகனிடை.க. பருத்தியிலை அரைத்து ரெண்டு மாங்காயளவு மேற்படி மருந்து விராகனிடை.க-ம் சேர்த்து யேழு நாளைக்கு சாப்பிடவும். பேரீச்சம் பழம், நல்ல வெல்லம் வகைக்கு பலம்.க, முந்திரிப் பழம் பலம்.½, கடுக்காய் பலம்.க, கசாயம் வைத்து சாப்பிடவும். அத்திப் பழம் பிழிந்து தேன் கூட்டி முழுங்கவும். பழம் கிடையாதே போனால் பழமுள்ள நாளேயிலே யெடுத்துப் பொடிந்து வைத்துக் கொண்டு மூன்று நாள் தேன் கூட்டிச் சாப்பிடவும். மேல் பட்டை இடித்து சாறு பிழிந்து தேன் கூட்டிச் சாப்பிடவும். தவலை கண்டால் தென்னம் பூ முகிழ் விரியாத சங்கு நிறமுள்ள பாளையும் சித்திரப் பாலாடையும் நல் நாரும் அரைத்துக் கலக்கி உள்ளுக்கு கொடுக்கவும். கம்பரிசி மாவிடித்து கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். செம்பருத்தி யிலை நாற்றந்தங்காயளவு விழு பட் அரைத்து யிளநீரில் கலக்கிச் சட்டி காய வைத்து முரித்து வடி கட்டிச் சாப்பிடவும்.

காசத்துக்கு:- ஆலம் விழுது, யிலவம் பட்டை, பற்படாகம், தென்னம் பாளை, ஆடாதோடை அருகம் வேர், முந்திரிப் பழம், தேன் சர்க்கரை கட்டிச் குடிக்கவும்.

(யளயது ய ஏடுகள் சிதைந்துள்ளன விடப்பட்டவ)

<u>குன்மத்துக்கு அஷ்ட குன்மத்துக்கு உருண்டை:-</u>

பிரண்டை பலம்.உ, வேப்பம் பட்டை பலம்.ச, பீமுட்டை பீநாரி இலை பலம்.க, மிளகு, தக்காளி யிலை பலம்.க, மிளகு பலம்.க, சுக்கு பலம்.க, ஈர வெங்காயம் பலம்.உ, இந்த மருந்தை ஆர்க்கப் பொடி பண்ணிப் பசுவின் நெய் படி.¼ சேர்த்து சூரிய புடமாக வைத்துச் சாப்பிடவும்.

<u>அஷ்ட குன்மத்துக்கு:-</u>

கடுகு, அசமதாகம், நற்சீரகம், சாதிக்காய், கடுகு, இந்துப்பு, காயம் பூண்டு கடுகுரோகணி இதுகளெல்லாம் வறுத்து இடித்துச் சரியிடையாக நொச்சி யிலைச் சாற்றிலரைத்துக் கடுக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி ஒரு உருண்டை வெந்நீரில் கொள்ளவும்.

எரி குன்மத்துக்கு:-

ஒரு உருண்டை பழச் சாற்றில் கொள்ளவும். சத்தி குன்மத்துக்கு சாறணை வேர் வில்வ வேர், முக்காவேளை குருந் தொட்டி வகைக்கு நால் காசிடை நருக்கி கசாயம் ஒரு படி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சி ஒரு உருண்டை யிடவும்.

ரத்த குன்மத்துக்கு:-

மாதளங்காய் ஒந்து நருக்கிப் போட்டு இரு நாழி நீர் விட்டு உழக்காக காய்ச்சி ஒரு உருண்டை யிடவும். பருத்திக் காய் ஆறு நருக்கிப் பிழிந்து அதிலுண்டை ஒன்று யிடவும்.

பித்த குன்மத்துக்கு:-

நாழி தண்ணீரை உழக்காகக் காய்ச்சித் தேன் கூட்டி ஒரு உருண்டை கொடுக்கவும். சிலேட்டும குன்மத்துக்கு திப்பிலி கடுக்காய், தூதுவளை வேர் சமன் கொண்டு நருக்கி இரு நாழி நீரிட்டு உழக்காகக் காய்ச்சி ஒரு உருண்டை இடவும்.

வாத குன்மத்துக்கு:-

நொச்சி வேர் சாறணை வேர், இவை யெல்லாம் ஒரு நிறையாய் நருக்கி இரண்டு படி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சி அதில் ஒரு உருண்டைக் கொடுக்கவும். மூன்று நாள் கழிந்த பிறகு இஞ்சி சாற்றில் தேன் கூட்டுடைட கூட்டி ஒரு உருண்டை கொடுக்கவும். மறுபடி மூன்று நாள் எலுமிச்சம் பழச் சாற்றில் வெந்நீரில் கொள்ளவும். எல்லா குன்மமும் தீரும்.

பதினெட்டுக் குன்மத்துக்கு:-

தேத்தான் வேர் மேல் பட்டையைச் சீவி வெள்ளாட்டுக் கோமியத்தி ஊற போட்டு உலத்திப் பொடி செய்து குமரி பொடியில் தண்ணீர் விட்டு இர பதத்தில் எடுத்துக் கொண்டு குளித் தயிர் பிரண்டி கொடி வேலி வேர் மேல் பட்டை தோல் சீவிக் காசிடை தயிலங் கூட்டிச் சாப்பிடவும். உப்பு, புளி ஆகாது. வாழைக்காய், தூதுவளை அரைக்கீரை, மிளகுகூட்டவும்.

வயற்றில் சென்டைக்கு:-

ஓமட்டிக் காயை ஒரு ரூபாய் அகலம் அறுத்து அதிலே உப்புக் கல்லு காசிடை போட்டு கள்ளிப் பால் விட்டு மறுபடி அமுக்க வில்லையை மூடி விழாமல் நூல் சுத்தி ஆறு விராட்டியில் புடமிட்டு அதற்களவாசிய பழையவெல்லம் சேர்த்து அரைத்து வைத்துக் கொள்ளவும். சுன்டைக்காய் விதம் மூன்று நாள் சாப்பிடவும். மறுபடி பத்து நாளைக்கு ஒருக்கால் மூன்று தரம் சாப்பிடவும். பால், நெய் சவுக்கியமாய்க் கூட்டவும்.

விஷூசிக்கு:-

ரசம், சாதிலிங்கம், நாவி, கெந்தகம், வெங்காரம், சுக்கு, திப்பிலி, மிளகு சமன் சேர்த்து இஞ்சி சாறு விட்டு நாலு சாமம் அரைத்துக் குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி கிறுனிக்கு பொன்முசுட்டை வேர் அதிவிடையம் கோரைக் கிழங்கு, சமன் கூட்டி கசாயம் வைத்த அதில் ஒரு உருண்டை இடவும். ரசிவுக்கு மப்படி யர்தக் கசாயத்தில் கொடுக்கவும். சுவாச காசத்துக்கு எலுமிச்சம் பழச் சாற்றிலிடவும். அதிசாரத்துக்கு சுக்கு, திப்பிலி, கிராம்பு, இந்துப்பு கூட்டிச் சூரணம் பண்ணி ஒரு காசிடை அதில் ஒரு உருண்டை கூட்டி இடவும்.

அசீரணத்துக்கு:-

சிறு வழுதலைச் சாற்றிலிடவும். அக்கினி மந்தத்துக்கு கடுகு சூரணத்திலிடவும். வாய்வுக்கு பஞ்ச மூலக் கசாயத்திலிடவும். அசீரண வாய்வுக்கு இஞ்சி சாற்றிலிடவும்.

அகத்தியர் குழம்பு:=

காயம், கடுகுரோகணி, இந்துப்பு, ரசம், வெங்காரம் மனோசிலை, திப்பிலி கருஞ்சீரகம் வகைக்கு விராகனிடை.க, சுத்தி செய்த வாளம் விராகனிடை.9, சேர்த்து தனித் தனியே அரைத்துப் பசசை விராகனிடை.உ, சேர்த்து ஒரு சாமமரைத்து வைக்கவும். அனுபானம் வெல்லம், வெந்நீர் மூன்று கடுகளவு கொடுக்கவும். பேதியாகும்.

குழம்பு:-

ரசம் விராகனிடை.8, நாபி விராகனிடை.உ, நெரி விஷம் விராகனிடை., இந்துப்பு விராகனிடை.க, கருஞ்சீரகம் விராகனிடை.5, மனோசிலை விராகனிடை.எ, அரிதாரம் விராகனிடை.க, காயம் விராகனிடை.10, கெந்தகம் விராகனிடை.8 வாளம் கொட்டை50 அரைப்பு வேலிப் பருத்திச் சாறு நாலு சாமம் தேங்காய் பால் ரெண்டு சாமம் பனங் கொட்டாங்கச்சிக் கரி பலம்.2, அரைப்பு ஒரு நாழிகை அரைத்து வழித்து வைக்கவும். கிடவிஷம், வண்டு கடிக்கு, மிளகு பிரமாணம் வேலிப் பருத்திச் சாற்றிலிடவும். இரண்டு வேளையும் ருக்கிர வாய்வு, நெஞ்சடைப்புக்கு பூண்டு தயிலத்தில் கொடுக்கவும். சிலேட்டுமத்துக்கு தேனில் கொடுக்கவும். பாரிச வாய்வு, பக்க வாதம் சுரோணித வாய்வு, பேய் நாய் கடிக்கு இஞ்சி, முருங்கைச் சாற்றில் பார்த்துக் கொடுக்கவும். இவை யெல்லாந் தீரும். இது கை கண்டது.

துவசிக மார்வலி குழம்பு: எந்த விடத்துக்கும்:-

கடுக்காய், கடுகு, இந்துப்பு, காயம், வெங்காரம், குதம், மரேதிலை, அரிதாரம், சீரகமும், கடுகுரோகணி, கருநாபி வகைக்கு களஞ்சி யிடை நேர்வாளம் களஞ்சி.5, கொட்டங்கச்சி கரி களஞ்சி யிடை தேங்காய் பச்சிலைச் சாறு விட்டு அரைக்கவும். அநுபான மறிந்து கொடுக்கவும். இரண்டு நாழிகை முழுகிக் கொண்டிருந்த காடியில் மருந்தை அரைத்து மேற்படி காடியில் குழப்பி ஒரு தட்டிடை செங்கொட்டை தயிலம் ஊற்றிச் சாப்பிடவும். கடித்த வாயிலுந் தடவி அனலில் காட்டவுடம். தேளுக்கு தயிலந் தடவி சுண்ணாம்பு போட்டு அனல் காட்டவும்.

சாதிலிங்கக் குழம்பு:-

தன் மந்திரி பாடல்:-

சோதிலிங்கத்தின் பொதிய மலை சுவாமி பாத தாழப் பணிந்து
சாதிலிங்கத்தின் குழம்பைச் சாற்றக் கேள்
வாதி லிங்கம் வெள்ளைரையரன் கூட யெடுக்கும் ரச கற்பூரம்
சொன்னதிது லின் நகை பாதி நன்னயமாய் வெங்கார முன்னே விளம்பியதுங் கல்லாறு
நங்காரஞ் சுத்தி செய்து நாடியே பொங்காமல் கூட்டித் தகை பாரு
ஒரு கமல ஆவிடைக்கு வாட்டமில்லாச் சுத்தி செய்து வாழ மனைத் தீட்டி
விருப்பமுடனே யரைக்கும் வேளையிலே ஆமணக்கம்
பருப்பெடுத்து லிங்க நிறை பாச்சியே அரைத்தவுடன்
கொம்பில் வழித் தடக்கிக் கோதையாரே மாமுனியாள்
வெம்புயிர்ரூர் தம்மை மிகப் பாருங் கும்பி வயத்து வலிக் கெல்லாம் வச்சிர கசாயத்தில்
நயத்துடனே பணவிடை தான் முட்ட நாடாது செயத்துடனே சூலை முட்கு மூடி யிடங்காலே
சித்திர மூலந் தனில் பணவிடை தான் மூட்டி விடு
சீலமதாய் கற்கடக சிங்கி களக் கொட்டிக் காய் வெள்இள்ளி சுக்கு முருங்கி
களக் கொட்டிக்காய் வெள்ளுள்ளி சுக்கு முருங்கைத் தூளிருடனே சர்க்கரையி லொன்று
யரைத்தூட்டி உட்டும் பணவிடை தான் அண்ட வாத சூலை பண்டாது சொண்ட தொரு
நொச்சி யிலைச் சாற்றில் நொடியில் பணவிடை முட்ட அச்சமுடன் வாத சுரம்
அத்து விடும் யிச்சையதாய் சூரிய கொடுவேலி தூய குப்பை மேனியிலைச்
சாறு பிழிந்து கொண்டேயிலே சாரித்து வீரியமாய் காச்சியதோர் ரெண்டிலே தனில்
காலமந்தி மூன்று தினம் பாச்சி விட நோய் கிரந்தி யற்றுப் போம் முட்சமுடன்
வெமுரம் பிசிய கொத்த மல்லியுடன் ரூல மரத்தை கோலுண்டாடன் நாலி
லொன்றும் வெந்திறக்கி அன்ரிரில் விட்டருந்த வே பகைத்தான் தொந்த சுரம்
வாங்கி விடும் தோகையரே சிந்தையதாய் வேலிப் பருத்தி யிலைப் பின்னையீர்
தாவரூர்சுக் காலில் திமிர் வாதம் பிடி காது வாயுமாய்ச் செங் கடுக்காய்
பூவரு சேர்ந்த கசாயந் தன்னில் பங்க மில்லாதே மருந்தைப் பாவித்து
சங்கையுடன் மாமலை யிட்டு மருந்தருந்தவே மூல காமாலை போகக் கடல்
போகுஞ் சிவியிலைச் சாற்றில் செய்யான் கடி விடுமும் நஞ்சுமடா தாமரையும்
நல்லுமே உன்னிகமாய் கன்னிக்குச் சூதகமே காணுமின்று நாள் தனிலே பொன்னின்
கரந்தை யிலில் பூன் மஞ்சலலில் யேகுங் கழுவிறீர் பேழை யெள்ளு யரிடடீரே.

வாத பிடியொன்று வாய்க்குமோ காதலிக்குள் நல்லோர்க்கப்
பேதி தன்னை நாட்ட வென்றால் பழையிச் வெல்லத் திராட்டி விடுமுமென்மையாய்
சொல்லக் கேள் குளிர்ந்த சல முண்டால் குறையாமலே பேதி
யெழுந்து வரும் போது வெந்நீரிட்டருந்து அருந்திடவே ஆவின் மோர் கூட்டி யசன
மிடப் பேதியும் மேவியதில் மாங்க பிஞ்சிதல் பாவினையாய் வசம்பருந்தவே நிற்கும்
வலிப்புகல வேறு மென்மல் நிசம் பொருந்தக் கசனிவிட நீங்குமே விடநு மிசைந்தால்
யொருக்கிலையி னாட்ட யெலி கடிக்க வேளையிலே கருக்கிலை நிற்கு விடுமே
சொல்லக் கேள் பெருக்கருடன் அன்ற மரநுர அமக்க சூாம்பு தன்னை பண்டிதரே யிந்த
முறை பாரு.

சிந்தூர்ந்த உருண்டை:-

ரசம் பலம்.க, பொன்னரிதாரம் பலம்.க, திப்பிலி பலம்.க, வெங்காரம் பலம்.க, நாவி பலம்.க, நெல்லி வளி பலம்.க, தானிக்காய் பலம்.க, கெந்தகம் பலம்.க, மிளகு பலம்.க, சுத்தி செய்த வாளம் பலம்.10, இது வெல்லாம் நிறைப் படி தனித் தனியே பொடி செய்து சீலை வடி கொண்டு முத்தின வாளத்தை அரைத்து அதிலே முத்தின ரசத்தை முருங்கையிலைச் சாறு விட்டு அரைத்து பின்பு குருவங்களெல்லாம் போட்டு ஒரு நாளைக்கு ஒரு சாமமரைத்து இப்படி யேழு நாள் அரைத்து பின்பு பாவட்டங் காயளவு உருண்டை செய்து நிழலலத்தி சிமிழில் வைத்து கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி வாய்வு, பித்தம், வாந்தி மயக்கம், வயிற்று வலி, யிசிவு, யிளம்பிள்ளை வாதம், பாரிச வாய்வு, சூதக வாய்வு, இதுகளுக் கெல்லாம் அநுபான் மறிந்து கொடுக்கவும் தீரும்.

சுடர் தயிலம்:-

கெந்தகம் பலம்.உ, மரேதிலை பலம்.உ, சவ்வீரம் விராகனிடை.க, சவுக்காரம் விராகனிடை.க, வெடியுப்பு பலம்.உ, அரிதாரம் விராகனிடை.க, இவைகளெல்லாம் கல்வத்திலிட்டு ஆவின் நெய்யில் ஐந்து நாழிகை அரைத்து அதை சுடர் தயிலம் வாங்கி கொண்டு குட்டம்.6, க்ஷயம்.7, குன்மம்.8, சூலை ரெணம், வெள்ளை ரெத்தக் கொடி மேகம்.21 இதுகளெல்லாந் தீரும். அநுபான மறிந்து கொடுக்கவும்.

முருங்கிலைத் தயிலம்:-

மருங்கிலே விராகனிடை.உ, சாதிலிங்கம் விராகனிடை.1½, அரிதாரம் விராகனிடை.1½, வேப்பெண்ணெ படி.¼. சுலையத்தில் விட்டு மேலே சில்லுக் கொண்டு மூடிச் சீலை மண் செய்து அடுப்பிலே வைத்து பொரிக்க ஓசை அடங்கினதின் பிறகு இறக்கி வெடுக்கு பிடிப்பில் தடவவும்.

தாம்பிரமை:-

தாம்பிரத் தகடு அரசி லைக் களத்தில் தகடு தட்டி எலுமிச்சம் பழச் சாற்றில் மூன்று நாளும் வைத்து பிறகு எடுத்துக் கழுவிப் போட்டு பசுவின் மோரில் ஐந்து நாளுறப் போட்டு அதைக் கழுவிப் போட்டு ஒரு பலத் தகட்டுக்கு மூன்று காசிடை நெல்லிக் காய்க் கெந்தகம், உப்பு மூன்று காசிடை பழச் சாறு விட்டு அரைத்து தகடு தெரியாமல் பூசி வெய்யிலில் இரண்டு நாழிகை வைக்கவும். ஒரு உலை மூடியில் வைத்து மூடி காட்டு எருமுட்டை கீழும், மேலும் போட்டுப் புடம் வைக்கவும். ஆற விட்டுப் பார்க்க மையாகும் அதை எடுத்து அம்மியிலரைத்துச் சீசியில் வைத்துக் கொண்டு சுக்கு, திப்பிலி, மிளகு வகைக்கு ரி பலம்.௧, பொடி பண்ணி கூட்டி [illegible] விராகனிடை தேனில் கொடுக்கவும். பாண்டுவுக்கு எருமைத் தயிரில் கொடுக்கவும். காமாலைக்கு சர்க்கரையில் கொடுக்கவும். குன்மத்துக்கு இஞ்சி சாற்றிலிடவும். பக்க சூலைக்கு வெள்ளுள்ளித் தயிலத்தில் கொடுக்கவும். பத்தியம் புடலங்காய், [illegible], சிறுகீரை, [illegible] பசுவின் பால், வெள்ளாட்டுப் பால், பசு நெய், கூட்டவும். மிளகு, புளி ஆகாது. அகஸ்தியர் பாடல். மேற்படி தாம்பிரமை.

தாளக பற்பம்:-

தாளகம் பலம்.௫, சுண்ணாம்பு தண்ணீரில் டோலாயந்திரங் கட்டி ஒரு நாழிகை பரியந்தம் கமலாக்கினியா யெரித்து [illegible] வெய்யில் காய வைத்து கோமூத்திரத்தில் மு முப்பதும் ஊற வைத்து பகல் முப்பதும் உலர்த்தவும். அந்தப் பெரும் பூசணிக்காய் தண்ணீரில் ஊற வைத்து உலர்த்தவும். காடியிலே அந்தப்படி ஊற வைத்து உலர்த்தவும். பிறகு கத்தாழைச் சாற்றில் ஒரு சாமமரைக்கவும். மத்தா நாள் எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு சாமமரைக்கவும். இதைக் கொப்பு போலே வில்லை, வில்லையாகத் தட்டி இரண்டு நாள் காய்ந்த பிறகு புளியம் புறணிச் சாம்பல், நாயுருவிச் சாம்பல் வாழைக்காய் சருகு, காம்பு சாம்பல் இந்த மூன்று சாம்பலும் அரைப் பானைக்குப் போட்டு அது மேல் வில்லை பரப்பி அது மேல் ஐந்து பலம் திப்பிலிச் [illegible] பொடி போட்டு அதின் மேல் முன் சாம்பல் பாதி பானைக்குப் போட்டு வாய் மட்டத்துக்கு வில்லையோடு மூடிச் சீலை மண் செய்து விநாயக பூசை செய்து ஒரு சாமம் மங்கள வாரம் ஆதித்த வாரம் கமலாக்கினியாக எரிக்கவும். குளிர் ஆறின பிறகு பானை திறந்து பற்பம் பரணியில் வைத்துக் கொண்டு அற்ப சரீரத்துக்கு அரைப் பணவிடை கெட்டிச் சரீரத்துக் கால் பணவிடையும் அநுபானத்தீ பதத்திலிடவும். சகலத்துக்கும் ஆகும்.

அரிதார செந்தூரம்:-

அரிதாரம் பலம்.௧, நொச்சியிலைச் சாறு பலம்.௧, செம்பருத்திச் சாற்றி லரைத்துக் குகையில் வைத்து முள் முருக்கிலைச் சாறு சீலை பிசட்டி குகையிலரைத் தடவி அந்தச் சீலை கொண்டு குகையில் மூடிப் பின்பு ஏழு சீலை மண் செய்து காட்டெரு முட்டை கெசபுடம் போடவும். [illegible] போடவும். அதை எடுத்துப் பதனம் பண்ணி வைத்துக் கொண்டு அநுபானம் சிறு பயறளவு வெற்றிலைச் சாற்றில் கொள்ள இருமல், சேற்பனம் நிற்கும். ஈர வெங்காயத்தில் கொடுக்க மேல் மூச்சுத் தீரும். நொச்சியிலைச் பொடியில் கொடுக்க சேற்பன சுரம் போம். வாழைப் பழத்தில் கொடுக்க கொழுந்த சுரம் நிற்கும். மோரில் கொடுக்க வயறு [illegible] சுரம் போம். வெண்ணெயில் கொடுக்க வாந்தி விக்கல் போம். உத்தாமணிச் சாற்றில் கொடுக்க நாலாமுறைக் காய்ச்சல் போம். மருதம் பட்டைப் பொடியில் கொடுக்க சலக் கழிச்சல் நிற்கும். பருத்தி விரைப் பருப்புப் பொடியில் கொடுக்க வெகு மூத்திரம் போம்.

தெட்சணாமூர்த்தி தேங்காய்க் கட்டு:-

சாதிலிங்கம் விராகனிடை.உ, சூதம் விராகனிடை.௨, காந்தம் விராகனிடை. பொரிகாரம், பெருங்காயம், சீரகம், இந்துப்பு, வெடியுப்பு, சவுக்காரம் ஓமம் நவச்சாரம், திப்பிலி, கருஞ்சீரகம், கெசாபுரம் வகைக்கு/ விராகனிடை.௩, பூண்டு, பூண்டு தோல் போக்கி பலம்.௧, உத்தாமணிச் சாற்றில் ஒரு சாமம் தானரைத்து முதிர்ந்த தேங்காயிலடைத்து தண்ணியாலே கண்ணை மூடி பசுவின் சாணியில் வைத்து சுடபுட மிட்டு ஒரு கள்ளி அவரைத்து விளக்கெண்ணெ சட்டியில் அமரியிட்டு இரும்புக் கரண்டியால் மத்தித்து வெண்ணெ போலே லேகியம் வச்சிரப் பால் விட்டு பட்டைக் கொடுக்கவும். கெண்டை வாய்வுத் திரட்சி, மகோதரம், நீர்மை, விஷபாகம், ஓயாத வயிற்று வலி மல சலக் கோர்வை, விஷக் கரப்பான், வீக்கம், கெர்ப விப்புருதி, கிருமி, குதக வாய்வு, உதிர ரோகம் இவை யெல்லாந் தீரும். உப்பு, புளி ஆகாது.

சன்னிக்குத் தயிலம்:-

வேப்பெண்ணெ படி. , ஊதியைக் கூம்பு சித்திர மூலம், கடுதைக் குளம்பு, வடக யிஞ் ஆமையோடு வசம்பு ஓமம், பூண்டு வகைக்கு பலம்.¼ இது வெல்லா மிடித்து எண்ணெயில் போட்டு எரித்து வைத்து வைக்கவும். ரசம் விராகனிடை.¼, வீரம், பூரம் சாதிலிங்கம், வெள்ளைப் பாஷாணம், கௌரி பாஷாணம் வகைக்கு விராகனிடை.¼ இது வெல்லாம் நசுக்கி சீலையில் பரப்பித் திரி பண்ணி வேப்பெண்ணெயில் [illegible]டர் தயிலம் வடித்து மேலுக்கும் பூசவும்.

கிரணிக்கு கழிச்சலுக்கு:-

சுக்கு பலம்.1, பாசிப் பயறு அளவாக உடைத்து நருக்கிப் போட்டு எட்டு படி தண்ணீர் விட்டு ஒரு படியாக புிறுந்து வடி கட்டிக் கொண்டு மூன்று பலம் பனைவெல்லம் கரைத்து விட்டு ப வின் பால் படி.½ தேன் படி.1/8, விட்டு மெழுகு பதமாய் எடுத்து வைக்கவும். களிச்சல் ரொம்பக் கண்டால் ரெண்டு நேரமும் கொடுக்கவும். இச்சா பத்தியம்.

வெள்ளைக் கிரணிக் கழிச்சலுக்கு:-

ஆவாரை முத்தின கொம்பாக வெட்டி வந்து பட்டை தட்டி யிளங் காச்சலாக காய வைத்து இடித்து மூன்று ப ளாளெடுத்து எருமை மோரில் ஆறு படி கொண்டு ஆறு நாளைக்கு சும்மா வைத்து ஏழா நாள் மோரில் போட்டு பத்து நாளைக்கு இருக்க விட்டு சீராய்ச் சாப்பிடவும். சகல வியாதியும்; மூலக் கிரணியும் தீரும். குங்கிலியம் அத்திப் பாலில் கொடுக்கவும். அதிவிடையம், குரோசாணி யோமம், அபின், கஞ்சா, சுக்கு, மதுரம், சன்ன லவுங்கப் பட்டை, சாதிக்காய் வகைக்கு விராகனிடை.க, சாதிப்பத்திரி விராகனிடை.½, மாதளங்காய் கொண்டு ஒரு புறத்தில் கீறி விரையைத் தள்ளிப் போட்டு இந்த மருந்தெல்லாம் எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்துக் காய்க்குள்ளே செலுத்தி சாணியி பிடித்து எருவில் வைத்துச் சுட்டு அது வெந்த பிறகு சாணியைப் பிட்டு போட்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டுதி அரைத்து ஒரு சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொண்டுபொன் முசுட்டை வேர் கொண்டு வந்து அரைத்து யேழு தரம் புடம் பண்ணி அதை வில்லை செய்து கொண்டு கோரைக் கிழங்கு கொண்டு வந்து சீவி யிடித்து வருத்து ஒரு வில்லையும் கூடப் போட்டு வருத்த அ ரப் படி தண்ணீர் விட்டு அரைக்கால் படியாகக் காய்ச்சி மேற்படி உருண்டை ஒன்று உரைத்துக் கொடுக்கவும். இதுக்கு தீரும் வியாதி கிரணி, கவிச்சல், சீ மூலவாய்வு, ஆசவக் கடுப்பு, வயத்துக் கடுப்பு, ரெத்த மூலம், சீ விழுகிறது கழியுறது இது வெல்லாம் தீரும்.

ஊது கிரணிக்கு:-

கவுதும்பை, அரி இலை அரைத்து எருமைத் தயிரில் குழப்பிச் சாப்பிடவும். கிரணிக்கு கெந்தகத்தைச் சட்டியில் வைத்து காயக் காய வேப்பெண்ணை விடுவது. மறுபடி யெடுத்து கஞ்சா தூள் கலந்து சாப்பிடவும்.

ரெத்த மூலத்துக்கு காமாலைக்கு மருந்து:-

முசுட்டை சமூலமரைத்து நாரத்தங்காயளவு விழுது எருமைத் தயிரில் சாப்பிடவும். சுகை நறு கஞ்சா சாதிக்காய், குரோசாணி, யோமம், வகைக்கு பலம்.க, சூரணம் கருவேம்பின் தூள் பலம்.க, வாழைப்பூ பிட்டு வைத்து பிளிந்து அதில் குழப்பி சாப்பிடவம். கிரணி மூல வாய்வு இவை தீரும்.

சீப் பிரமியத்துக்கு ரெத்தப் பிரமியத்துக்கு மருந்து:-

மாம்பட்டை ஒரு குத்து நாகப் பட்டை ஒரு குத்து இது இரண்டையும் இடித்து தூள் பண்ணி ராத்திரிக்கு பசுவின் மோரில் ஊற வைத்து சீரகம் பலம்.க, பொன் வறுப்பாக வறுத்து பொடி பண்ணி, சீனி பலம்.உ, சேர்த்து சீரகத் தூளையும் சீனியும் கலந்து கொண்டு ஊற வைத்த தண்ணீரில் யிறுத்து மூவிரல் கொண்ட தூள் போட்டு மூன்று காலமே கொடுக்கவும். உப்பு, புளி தள்ளவும்.

மேகத்துக்கு எண்ணை:-

மஞ்சிலை, சாதிலிங்கம், கெந்தகம் வகைக்கு களஞ்சி வீதம் சுட்டிப் பொடி பண்ணி நல்லெண்ணை படி.½, கையாந்தகரைச் சாறு படி.¼வில் போட்டுப் பதமா யெரித்து வடித்து மூன்று நாளைக்கு வீசம் படி வீதம் சாப்பிடவும். யேழு நாளைக்கு உப்பு, புளி யாகாது. மேக முதலானதும் கேட்கும்.

அகத்தில் நாலு காண்டத்தில் மேகத் தெண்ணை:-

பால் பதக்கு, மோர் பதக்கு, எண்ணை தூணி இஞ்சிச் சாறு குமிணி சதாவேரி நெருஞ்சி அரிசி கோஷ்டம், வெந்தயம், கடல்நுரைச்சி, ஆனை திப்பிலி, வகைக்கு பலம்.10, சடாமஞ்சி, புஞ்கு சட்டம் சங்கங் குப்பி, கொத்தான் சாறு குமிணி செப்பு நெருஞ்சி, குருந் தொட்டி கொடுப்பைச் சாறு, சிறு செருப்படிச் சாறு மேனிச் சாறு, வேலைச் சாறு, எருக்கம் பழுப்பு, எலிச் செவி, முருங்கை துளசிச் சாறு வகைக்கு சாறு படி.க, வீதம் தேவதாரம் பலம்.10, சிவதை வேர் பலம்.10 சித்தாமணக்கெண்ணையில் போட்டு எரித்து வடித்து வைக்கவும். மூன்று நாளைக்கு ---வீதம் சாப்பிடவும். ஏழு நாளைக்கு பத்தியம்.

வாதத்துக் கெண்ணை:-

நல்லெண்ணை, விளக்கெண்ணை, புங்கெண்ணை, யிலுப்பெண்ணை, வேப்பெண்ணை, ஆறு நெரி விஷம், கெவுரி பாஷாணம், வெள்ளைப் பாஷாணம், கன் நார், துருசு காயம் வகைக்கு விராகனிடை. , வாளம் கொட்டை.50, எட்டிக் கொட்டை.50, சேங்கொட்டை.10 செவ்வகத்திச் சாறு படி.2½வேலி.ப பருத்தி வேர் கொண்டு வந்து அரைத்து நாரத்தங் காயளவு, நொச்சியிலை சாறு படி.க, எண்ணையில், பச்சிலைச் சாறு விட்டு கடை மருந்து அ ரைத்துப் போட்டு மேற்படி வேலிப் பருத்தி அரைத்ததையும் போட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து வைக்கவும். உள்ளுக்கு காசிடை சாப்பிடவும். மேலுக்குப் பசவும். இதுக்கு

வியாதி கை கால் முடக்கிறது, கருப்பு, பெருத்தாலும், சன்னி வாதம் அண்டம் கடந்தாலும் தீரும்.

மேகம் கிரந்தி குலைக்கு என்னை:-

சின்னி, கருநொச்சி, சங்கங் குப்பி, கிரந்தி நாயகம் சாட்டறணை, கொட்டைக் கரந்தை, கோளியவரை குப்பை மேனி, நல்ல வேளை, தவசி முருங்கை, அவுரி இவை வகைக்கு படி.1/8 வீதம் சங்கம் வேர், செங்கத்தாரி வேர், மிளகறணை வேர் காளாத்தி வேர், சத்தி சாறணை, கிழங்கு வெள்ளறுகு, சித்திர மூலம், ஆகாச கெருடன் கிழங்கு, பாகல் வேர், விழுதி வேர் களருகா வேர், சிறகீரை வேர், கொஞ்சி வேர் இது வெல்லா நருக்கி குருணி தண்ணீர் விட்டு ஒரு பரீடியா யிறத்து விளக்கெண்ணை படி.க, விட்டுக் கிண்டவும். அதில் பறங்கிப் பட்டை பலம்.உ, செவியும் பலம்.½, ஆயில் பட்டை பலம்.½, அரத்தை பலம்.½, சிறுதேக்கு பலம்.½, கருஞ்சீரகம் பலம்.½, கோஷ்டம் பலம்.½, கடுகுரோகணி பலம்.½, கடுக்காய் பலம்.½, காட்டு சீரகம் பலம்.½, கார்போகரிசி பலம்.½, மிளகு பலம்.½, சீரகம் பலம்.½, ஏலம் பலம்.½, கஸ்தூரி மஞ்சள் விராகனிடை.க, யெல்லாப் பொடியும் போட்டு மருந்தெல்லாங் கூட மட்டும் அட பாகமாக வைத்து மருந் தெல்லாங் கூடின பின் பதமா யெரித்து வடித்து வைக்கவும். முதல் நாள் படி.1/8-ம் மறு நாள ¼ படி மூன்று நாள் 1/8, படி இந்தப் படி இந்தப் படி சாப்பிடவும். எழு நாளைக்கு உப்பு, புளி ஆகாது. கெற்பிணிக் காரிக்கு நித்தம் காசிடை சாப்பிடவும். கை கண்டது.

பறங்கிப் பட்டை பலம்.¼, கருஞ்சீரகம், கடுக்காய், மிளகு, சீரகம் வகைக்கு பலம்.1/16 திருவாகை சமூலந் சூள் பண்ணி பலம்.½ மருந்துகளை சூள் பண்ணிப் போட்டு சாப்பிடவும். புளி, புகையிலை ஆகாது. மிச்சா பத்தியம்.

மேகத் தென்னை:-

விளக்கெண்ணை படி.க, தழுதாழை, கருநொச்சி, சங்கங் குப்பி, வெள்ளறுகு, வெள்ளைச் சாறணை, முருங்கை வாகை, வகைக்கு சாறு படி.½, என்னையில் விட்டு பறங்கிப் பட்டை பலம்.8, கிளி மூக்கு கிழங்கு பலம்.10, மிளகு, கிராம்பு, ஓமம், சாதிக்காய், பத்திரி, சீரகம், கோரோசனை, கடுக்காய், கடுகுரோகணி, தானிக்காய், சாதிலிங்கம் இவை யெல்லாம் வகைக்கு விராகனிடை. , வாய் விளங்கம் கொத்தமல்லி பலம்.10, உள்ளி படி.க, உரித்துஅரைத்துப் போடவும். பதமா வடித்து வைக்கவும். மூன்று நாளைக்கு படி.1/ வீதம் சாப்பிடவும். உப்பு, புளி ஆகாது. இதுக்கு தீரும் வியாதி கிரந்தி குலை வெட்டை க்ஷயரோகம், ரெணம், புரை புரை பவுத்திரம் எழும்புருக்கி, பித்த பாண்டு, நீர் சிறப்பு, கல்லடைப்பு, லிங்கப் புத்து அரி கண்டமாலை இவ்வளவும் தீரும். கை கண்டது.

களத் தென்னை:-

ஏலம், கோஷ்டம், செண்பகப்பூ, புண்டு, வசம்பு, துடரிக் கொழுந்து, சுவரைக் கொழுந்து, ஆவாரம் பட்டை அவரைக் கொழுந்து, அவரிக் கொழுந்து, வறப்புலாக்கொழுந்து, நாவல் கொழுந்து, வேலாம் பட்டை, தகரைக் கொழுந்து, தன்னி விட்டான் இலை நரிப் பயத்தன் கொடி, சிறு புள்ளடி வல்லாரை பழம், பாசி, தென்னம் பூாமுகிள் விரியாத சங்கு நிற முள்ளது ஆக வகை யெல்லாம் நய்ய இடித்து நருக்கி என்னையில் போட்டுசூரிய புடமாக வைத்து ஒரு துட்டிடை கொடுக்க அஷ்ட களங்களும் போம். மேலுக்கு பூசவும்.

நீர்க் கட்டு மலக் கட்டுக்கு:-

சாறணை வேர், கடுக்காய், மிளகு, சிறகீரை வேர், நெருஞ்சி வேர், சிறுபூளை வேர், கையாந்தகரை வேர், நர்முள்ளி வேர், கோவைத் தண்டு, சுரைக் கொடி சமன் கசாயம் வெங்காரப் பொடித்திட்டுக் கொடுக்கவும்.

மேகப் பிடிப்புக்கு:-

பறங்கிப் பட்டை பலம்.1, மயில் துத்தம் பலம்.க, பட்டையைப் பாக்குப் போலே நருக்கி ஒரு முடாவில் சதுரக் கள்ளி பலம்.50, கண்டங் கண்டமா நருக்கிப் போட்டு மூடி சலை மண் செய்து இரண்டு நாள் ஆறு சாமம் எரிக்கவும். எடுத்து உலத்திப் பொடி செய்துமயில் துத்தமும் சேர்த்து முசுமுசுக்கைச் சாற்றில் பிசறி ஒரு குண்டு சட்டியில் ரசம் விராகனிடை.உ, அலாத்திக் கற்பரம் விராகனிடை.உ, கெந்தகம் விராகனிடை 4, சாம்பிறுணி விராகனிடை.4, வெள்ளைக் குங்கிலியம் விராகனிடை. , பொடித்துப் போட்டு சட்டிக்குள்ளே வைத்துமேல் வேடு கட்டி பிசறின தாளை வைத்து சட்டி கொண்டு மூடிச் சந்து வாய் சீலை மண் செய்து சாமம் வரைக்கும் எரித்து யெடுத்துக் கொண்டு அதில் ஏலம் பலம்.½, சுக்கு பலம்.½ திப்பிலி பலம்.½, மிளகு பலம்.½, இந்துப்பு நருக்கு மூலம் இது பொடி செய்து சீனி சர்க்கரை பலம்.4, கூடப் போட்டு மத்தித்து வெருகடிப் பிரமாணம் சாப்பிடவும். புளி, புகையிலை தவிர்க்கவும்.

மேகத்துக்கு குளித் தயிலம்:-

சிவகுர் வேம்பு சமூலம் அமுக்கி வேர், எருக்கம் வேர், வெள்ளறுகு சமூலம் பெரும் குமட்டி வேர், சிறு குருஞ்சா வேர், மிளகறணை வேர், செம்புளிச் சங்கட்டை, ஆயில் பட்டை, பவரசம் பட்டை, சங்கம் வேர், பறங்கிப் பட்டை, பிரப்பங் கிழங்கு வாத கரப்பான் பட்டை, ரச கற்பூரம், வாய் விளங்கம், நெல்லிக்காய் கெந்தகம் இது வெல்லாம் ஒன்றாய்க் குளித் தயில மிறக்கி உள்ருக்கும் கொடுத்து மேலுக்குந் தடவலா யிடவும். சேங்கொட்டை குமிழ் வெட்டிப் போட்டு பலம்.10, ரசம் விராகனிடை.க,

குரோசானி ஓமம் விராகனிடை.உ, கருஞ்சீரகம் விராகனிடை.உ, வெற்றிலை கவுளி.½, தேங்காய் மூடி ஒன்று பனை வெல்லம் பலம்.5, இடித்து அந்தி, சந்தி சாப்பிடவும்.

__மேக ஊறலுக்கு:-__

நல்லெண்ணை படி.க, எருமைத் தயிர் படி.4, இந்துப்பு விராகனிடை.15, துருசு விராகனிடை.4, காயம் விராகனிடை.4, அதிவிடயம் விராகனிடை.8, கடுகு பலம்.உ இது வெல்லாம் சூரணம் பண்ணி தயிர், எண்ணையுங் காச்சி நீர் வற்றின பிறகு சூரணம் போட்டு பதமாக வடித்து மேகம் ஊறல் தீரும். கை கால் கடுப்பு கண்டதுக்கு சுக்கு பலம்.க, சீரகம் பலம்.உ, பறங்கிப் பட்டை பலம்.ச, கல்கண்டு பலம்.எ இது வெல்லாம் சூரணம் பண்ணி கல்கண்டு பொடி யிடித்துக் கலந்து அந்தி, சந்தி சாப்பிடவும். வெடுகடி வீதம் சாப்பிடவும். இச்சா பத்தியம் வைக்கவும்.

__வெட்டைக்கு மருந்து:-__

தேத்தான் கொட்டை நாலு கொண்டு வந்து ஒரு கொட்டை எட்டு பங்காய் பிளந்து அது கண்ட நிறைக்கு சீரகம் சேர்த்துக் கொண்டு இரண்டையும் ஒரு பொட்டண மாக கட்டி வாழை வெட்டின கிழங்கில் நடு மையம் தோண்டி பொட்டணத்தை அதுக்குள்ளே வைத்து மேலே சட்டி மூடிக் காலமே யெடுத்து அந்த சலத்தை நாழி கறண்டி யெடுத்து அதை விட்டு அரைத்துக் குழப்பி மூன்று காலமே சாப்பிடவும். உப்பு, பசு மோர் சேர்த்துக் கொள்ளவும். நாலா நாள் புளி சேர்க்கவும்.

__மேகத்துக்கு நெய்:-__

பசுவின் நெய் படி.க, ஆவாரை நிலவாகை, நெல்லிக்காய் கரும்பு, வெங் காயம், எலுமிச்சம் பழம், கத்தாழை, இளநீர் வல்லாரை வகைக்கு சாறு படி.½, சாறணை வேர், சங்கம் வேர், சிவனார் வேம்பு, அமுக்கரா கிழங்கு, அறுகம் வேர், வில்வ வேர், விலாமிச்சை வேர் வகைக்கு பலம்.க, வெட்டி வேர், செண்பகப்பூ, செங்கழுநீர்க் கிழங்கு, வகைக்கு பலம்.½ இது வெல்லா மரைத்து கோஷ்டம், சீரகம் கருஞ்சீரகம், சுக்கு, மல்லிகை, வெந்தியம், சடாமஞ்சி, மேன் பொடி இவ்வளவு கூட்டிக் கொதிக்க வைத்து மெழுகு பதத்தில் வடித்து வைக்கவும். இச்சா பத்தியம்.

__மேக ரணத்துக்கு:-__

லிங்கம் விராகனிடை.4, கெந்தகம் விராகனிடை.உ, தாளம் விராகனிடை.க, பொடி பண்ணி புளியஞ் சிராய் அனலில் புகை பிடிக்கவும் தீரும்.

__பித்த வாய்வுக்கு லேகியம்:-__

நெல்லிக்காய் படி.6, சர்க்கரை சேர்.க, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம் கிராம்பு, தாளிச பத்திரி, சீரகம், முந்திரிப் பழம், கொடிவேலி, லவங்கப் பத்திரி, கூகை நீர், அறனுகம், தெசாபுரம், திப்பிலி மூலம், செவியம், கச்சோலம் கொத்தமல்லி, ஆக வகைக்கு பலம்.க. சிவதை வேர் பலம்.க, பாலிலே சுத்தி பண்ணி மருந்தில் போடவும். காயை யிடித்து சாறு பிழிந்து அடுப்பிலே வைத்துக் காச்சி சர்க்கரையைப் போட்டுக் கிண்டி பாகு போலே வருகிற போது மருந்து பொடியை லேகியத்தில் போட்டு கிண்டி பசுவின் நெய் தேன் விட்டுக் கிண்டி இறக்கி வைத்துக் கொண்டு நாளொன்றுக்கு கொட்டைப் பாக்களவு இரண்டு நேரமும் சாப்பிடவும். பொரி, மிளகு நீர் கூட்டவும்.

__கண்ணுக்கு எண்ணை:-__

தென்னங் குரும்பைச் சாறு உழக்கு சீரா துளசிச் சாறு உழக்கு,
வன்ன முலைப் பால் பழம் சாவி சாறு உழக்கு வகையா யீருள்ளிச் சாறு உழக்கு
இன்னங் கெமரிச் சாறு உழக்கு இனியா தகரை கள்ளல் செறியும் விளக்கெண்ணை
நாழி கலந்தே நல்லெய்க் காச்சிடுமே.
ஏலம் கஸ்தூரி யிலவங்கப் பட்டை கோஷ்டம்
சாலவே கிராம்பு நற்சீரகஞ் சந்தனம் அதிமதுரம்
காலமே வெந்து கறண்டி நாற்பது நாள் கொள்ள
ஆலமே மணிகளெட்டு மகலு மென்றருளினாரே.

__வறட்சணத்துக்கு:-__

சித்தாமணக்கு எண்ணை படி.½, பால் விட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி அதில் சீரகம் மாசக்காய் கோஷ்டம், மதுரம் கிராம்பு, சுக்கு சரியிடை கோரக்கர் மூலி காசிடை வெந்தயம் பலம்.½ வறுத்து யிடித்து யெண்ணையில் போட்டுக் கொடுக்க வும். இருமல், அத்தி சுரம், உள்க் காச்சல், கடுப்பு இவை தீரும்.

__விரோசனத்துக்கு எண்ணை:-__

சுத்தி செய்த வாளம் பலம்.க, அழுகல் தேங்காய் பலம்.க, கள்ளிப் பால் விட்டு அரைத்து சிறு சுண்டைக்காய் வீதம் கொடுக்கவும்.

__எண்ணை:-__

எண்ணை படி.½, பசுவின் பால் படி.¼, கள்ளிப் பால் படி.½, சுத்தி செய்த வாளம் பலம்.உ, அரைத்துக் கலக்கி மெழுகு பதமாய் வடித்து வைத்துக் கொண்டு காசிடை சாப்பிடவும்.

மேகப் பிடிக்கு விடு முட்டித் தயிலம்:-

விளக்கெண்ணை, வேப்பெண்ணை, புங்கெண்ணை, புன்னைக்கா யெண்ணை வகைக்கு படி கள்ளிப் பால் எருக்கம் பால், சதுரக் கள்ளிப் பால், பசலின் பால் வகைக்கு படி. முசுறு முட்டை வெந்நீர் விட்டுப் பிழிந்து படி1/8, பூரகம், பெருங்காயம் ஓமம், சீரகம், இந்த மருந்தும் சேர்த்து பதத்தில் வடித்து பிடிக்கு யெண்ணையை கையில் தடவி அனலில் காட்டிப் பிடிப்பில் தடவவும். உள்ளுக்கும் கொடுக்கவும்.

வெகு மூத்திரத்துக்கு:-

புளியங் கொட்டை ஊறின தண்ணீரில் நிமிளை புரைத்துக் கொடுக்கவும். ஆறு நாள் உப்பு, புளி ஆகாது. சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.

முகர்ந்து பார்க்கிற விரோசனம்:-

பேய்ப் பீர்க்கம் விரை, பேய்ச்சுரை விரை, நேர்வாளம் பருப்பு, ஆக வகை மூன்றும் சரி கூட்டி முத்தின தேங்காய் திருகி முன் மருந்து பொடி பண்ணி பூவோடே சேர்த்துக் கலசத்தில் பிசறி சூரிய புடம் வைக்கத் தயிலம் வரும். அதை எழு தரம் கோழி யிறகில் தடவி முகர்ந்து பார்க்கப் பேதியாகும். எலுமிச்சம் பழத்தில் தடவி முகர்ந்து பார்க்கப் பேதியாகும். இதுக்கு மாத்து பச்சைத் தண்ணீரில் கழுவிப் போடவும். வெள் வேலாம்பட்டை கொண்டு வந்து அரைத்து மேலுக்குத் தவளை யிடவும். உள்ளுக்குச் சாப்பிடவும். தவசி முருங்கையிலை யரைத்து மேலுக்குப் பூசவும். தவளையிடவும். உள்ளுக்கும் சாப்பிடவும்.

விரோசனத்துக்கு கசாயம்:-

கடுக்காய், சிவதை வேர், சாறணை வேர், சுக்கு, கடுகுரோகணி தட்டிப் போட்டுக் கசாயம் வைத்துக் கொடுக்கவும். கள்ளிப் பால் படி.1/2, பனைவெல்லம் பலம்.5, பசுவின் பாலில் கரைத்து விட்டு மெழுகு பதமா யெடுத்துக் கொள்ளவும். விரோசனம் கொண்ட மறுநாள் அத்திப் பட்டை மாம்பட்டை, இலுப்பைப் பட்டை, ஓதியம் பட்டை, நவல் பட்டை, யிலவம் பட்டை, வகைக்கு சமன் சேர்த்து அட பாகமாய் கசாயம் வைத்து இரணத்தில் விட்டுக் கழுவி விளக்கெண்ணையில் கத்தாழை சாறு விட்டு சூரிய புடமாக வைத்து இரணத்தில் தடவவும்.

பேதிக்கு:-

கள்ளிச் சாறு படி.1/8, ஓமம் அரைத்துக் கலக்கிச் சாப்பிடவும். சீயக்காய் மூன்று களச்சிக் காயளவு அரைத்து வெண்ணை சேர்த்துச் சாப்பிடவும், பேதிக்கும். செங் கடுக்காய் பழம் புளியும், அரைத்து விளக் கெண்ணெயில் பிரட்டிச் சாப்பிடவும். பேதிக்கும். விளக்கெண்ணை படி.1/8, பூண்டு உரித்துப் போட்டு அ ரைத்துக் கொதிக்க இறக்கி காயம் சுட்டு பொடி பண்ணி வைத்துப் போட்டுச் சாப்பிடவும் பேதிக்கும். கொடிக் கள்ளிச் சாறு படி.1/4யில் மோர் சேர்த்து போட்டுப்பு பொடி பண்ணிப் போட்டுச் சாப்பிடவும் . மூன்று நாள் சாப்பிடவும்.

கெற்ப புழுவுக்கு:-

விழுதி யிலைச் சாறு, எருக்கிலைச் சாறு நல்ல வேப்பஞ் சாறு, பாகயிலைச் சாறு, குமட்டிக் காய்ச் சாறு, வகைக்கு படி 1/4, வேப்பெண்ணை படி.1/4, விளக்கெண்ணை படி.1/4, பதமாய் வடித்து முழுகின மூன்று நாள் முதல் மூன்று நாளைக்கு படி.1/16, சாப்பிடவும். எழு நாளைக்கு உப்பு, புளி ஆகாது. பத்தியமா யிருக்கவும். பேய்க் குமட்டி வித்து நேர்வாளம், பருப்பு இரண்டும சரி கூட்டி குளித் தயில மிறக்கி மஞ்சள் தூள் சேர்த்து முழுகின மறு நாள் காசிடை சாப்பிடவும்.

கெற்பிணிக்கு சுருங் கிரந்தி செங்கிரந்திக்கு:-

ரோமத்துச் சாம்பல் பலம்.க, பனை வெல்லம் விராகனிடை.க, வசம்பு சுட்ட கரி விராகனிடை.க, சுக்கு விராகனிடை.க, ஓமம் விராகனிடை.க, இது வெல்லாம் வெள்வேலம் பட்டைச் சாத்திலரைத்து குளப்பிக் கொடுக்கவும். ஆனை யிலை கோளிய வரையிலை மனத்தக்காளி நொச்சி, கிரந்தி நாயகம், அவரி இரண்டு களச்சி இந்த யிலை யெல்லாம் ஒரு நிறையாய்க் கொண்டு தனித் தனியாகச் சாறு படி.க, வெட்டு மருந்து ஆனை வேர் கொறுக்சி வேர், கொன்றை வேர், சங்கம் வேர், வெட்டுக் கிழங்கு, அமுக்சி, நல்ல முள்ளி வேர், செங்கத்தாரி வேர், பெரு நருளைக் கிழங்கு, ஆகாசக் கெருடன் கிழங்கு, வெட்டு மருந்து ஒரு நிறை, ஈர வெங்காயம் படி.1/2 அரிந்து தா ளாய்ப் போட்டு முன் இலை வகைச் சாறு கூட்டி நாழி விளக் கெண்ணை விட்டுக் குழப்பி சூரிய புடமாக வைத்து அதில் உழக்கு பால் விட்டுப் பதமாய் யெண்ணை பொன்னெரித்து வடித்து வைக்கவும். இரண்டு காசிடை மூன்று நாள் கொள்ளவும். எழு நாளைக்கு உப்பு புளி ஆகாது.

பறங்கிப் பட்டைச் சூரணம்:-

பறங்கிப் பட்டை, உருவானதாய் பலம்.5, சங்கம் வேர் பிராயங் கழங்கு கொட்டை பட்டை, சாறணை வேர், கொடிவேலி வேர், வகைக்கு பலம்.க பானையில் பசுவின் பால் படி.4 விட்டு பிட்டு வைக்கவும். மல்லிகை, மதுரம், ஓமம், அதிமதுரம், வால் மிளகு, வெந்தயம், அரத்தை, அக்கிரகாரம், திப்பிலி சாதிபத்திரி, சாதிக்காய், கிராம்பு, சீரகம், சுக்கு, மிளகு வகைக்கு விராகனிடை.1½ காய வைத்து இடித்து நாள் பண்ணிப் பிட்டுலே சேர்த்து பாதி சீனி சர்க்கரை சேர்த்து வெரு கடி பிரமாணம் சாப்பிடவும். இதனால் தீரும் வியாதி வாத சுரப்பான், சூலை மகா வாதம், வெட்டை, அக்கினி மந்தம், அதிசாரம், கிரனி, உப்பிசம், வயத்திரைச்சல், புண்கள் மூலவசீகரம், வச்சிர தேகம் இவை தீரும்.

பதங்கம்: பாரப்பா சொல்வேன் கேள் பரங்கிப் பட்டை
அப்பனே லேசுவுக்கு வாடினதைப் பார்த்து வான்மை
பெற ஆற பலம் பட்டை தன்னை வாகாகப் பாக்குப் போல் வெட்டி நீயும்
நன்மையுடன் சங்கன் குப்பிச் சாற்றிலதைப் பிரட்டி
மூன்று தரம் காய வைத்து வான்மையுடன் கரகத்தில்

தாது புஷ்டிக்கு லேகியம்:-

நரம்பு போக்கின விளாம்பிசின். பலம்.100, அதிற் களவாசிய பசுவின் பாலில் கரைத்து விரை போக்கி நரம்பெடுத்துப் போட்டு சீனி, சர்க்கரை ஏலம் கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, சீரகம், சுக்கு, மிளகு, மல்லிகை வகைக்கு விராகனிடை.க, பொடி செய்து அதற்களவாகிய தேன் விட்டு நெய் விட்டு பதமா லேகியம். ஒரு நேரத்துக்கு எலுமிச்சங் காயளவு சாப்பிடவும். பகிருவா*

சன்னிக்கும், சுரத்துக்கும் மாத்திரை:-

மஞ்சள், வேப்பிலை, மிளகு, கோஷ்டம், அதிவிடயம், சித்திர மூலம், முத்தக் காசு, பொன்முசுட்டை, சுக்கு, திப்பிலி, தேவதாரம், சிறுதேக்கு இது வெல்லாம் ஆட்டு மூத்திரம் விட்டு அரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை செய்து இதற்கு அனுபானம் சுரத்துக்கு மிளகு திப்பிலி கசாயத்தில் கொடுக்கவும். சிலேட்டும சுரத்துக்கு கோமியத்தில் கொடுக்கவும். சீத சுரத்துக்கு கோமியத்தில் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது. பித்த பாண்டுவுக்கு காராட்டு மூத்திரத்தில் கொடுக்கவும். கிறுவுக்கு மோரில் கொடுக்கவும். வயத்து வலிக்கு வெந்நீரில் கொடுக்கவும்.

எரி குன்மத்துக்கு மருந்து:-

சுக்கு, மிளகு, கடுகு, காயம், கருப்புகட்டி தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

அஸ்தி சுரத்துக்கு நெய் மருந்து:-

பசுவின் நெய் படி.உ, சீரகம் பலம்.உ, மிளகு பலம்.உ, சுக்கு பலம்.உ, சர்க்கரை பலம்.உ, மாதளம் பூ பலம்.க, மாதளங் கொழுந்து பலம்.க, மாதளம் பிஞ்சு பலம்.க, மாதளம் பட்டை பலம்க, இது வெல்லாம் நெய்யில் போட்டு வேக விட்டு அந்த மருந்தை அரைத்துச் சர்க்கரையும் போட்டு பதத்தில் எடுத்து நன்றாய்க் கிண்டி வைத்துக் கொண்டு அந்தி, சந்தி இரண்டு நேரமும் எலுமிச்சங் காயளவு சாப்பிடவும். சுரம் தீரும்.

விஷம் பல் கடி வெட்டை கிரந்தி லேகியம்:-

வெம்பாடம் பட்டை, பூத கரப்பான் பட்டை, கருஞ்சீரகம், கார்போக அரிசி, வம்புரிக்காய், வெள்ளைக் குங்கிலியம், கஸ்தூரி மஞ்சள், தருப்பை, மிளகு பூண்டு வசம்பு, நீரெட்டி முத்து, செவ்வள்ளிக் கொடி, செங்கத்தாரிப் பட்டை, ஆடு தின்னாப் பாளை வேர், ஏறப்பலா வேர், காட்டு மல்லிகை, கொடிவேலி மாவிலிங்கம் பட்டை கடை மருந்து வகைக்கு விராகனிடை.க. வேடன் மருந்து உள் வேட மருந்து வகைக்கு விராகனிடை.30, செங்கொட்டி பலம்.உ, மிளகு பலம்.½ பூண்டு பலம்கக, வெல்லம் பலம்.[illegible], எள்ளு படி.க, இது வெல்லாம் இடித்து லேகியம் பண்ணி சில் விஷம் பல் கடி வெட்டை, கிரந்திக்கு கொடுக்கத் தீரும்.

கிரந்திக்கு:-

வாகையில் கொண்டு வந்த சாறு பிழிந்து வீசம் படி சாறும், வீசம் படி நல்லெண்ணெயும் காலமே சாப்பிடவும். இந்தப் படிக்கு மூன்று நாள் சாப்பிடவும். ஏழு நாளைக்கு உப்பு, புளி ஆகாது.

சூலை கிரந்திக்கு:- செங்கொட்டையை பிடித்து தனியில் கிரியாகத் திரட்டி அச்செண்ணை படி.½, வார்த்துச் சுடர் தயில மிறக்கி திரிகடுகு, வீரம், லிங்கம், பூரம் கட்டி

இந்த மருந்தை சுடர்த் தயிலத்தில் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி ரொம்ப வியாதிக்காரனுக்கு ஐந்து நாள் கொடுக்கவும். புளி ஆகாது.

சூலைக் கட்டுக்கு:-

பறங்கிப் பட்டை பலம்.5, பிரப்பங் கிழங்கு பலம்.க, சிவனார் வேம்பு பலம்.க சங்கம் வேர் பலம்.க, கொடிவேலி வேர் பலம்.½, வெள்ளறுகும் வேர் பலம்.½ சுக்கு, மிளகு பலம்.க, இது வெல்லா மிடித்து அட பாகமாக வைத்துக் கசாயம் இரண்டு நாளைக்குச் சாப்பிடவும். புளி, புகையிலை ஆகாது. பத்தியமாயிருக்கவும். கை கால் பிடிப்புக்கு நொச்சியிலைச் சாறும் நல்லெண்ணெயும் சமன் கூட்டி படி.½/8, மூன்று நாள் சாப்பிடவும். ஏழு நாளைக்கு உப்பு, புளி ஆகாது. பத்தியம்.

ஆக்கிரணம் சன்னிக்கு:-

பேய்ப்பீர்க்கு விரை பலம்.1, மிளகு பலம்.உ, நாவி பலம்.2, பொடி செய்துவிலாங்கொழுயில் வைத்து ஊதவும். சன்னி சுரம் தீரும்.

புகை:- மிளகு மூன்று, நாவி ஒன்று ஆக மூன்றும் பொடி செய்து எருக்கம் பாலிலாட்டி குழாயிலடைத்து வைத்து ஊதவும். பாம்பு சட்டை, மயிலிறகு கருத்தை விட்டை, கேப்பை, வில்வ வேர், ஓமம், உள்ளித் தோல், துளசி குந்திருக்கம், வாட்டிப் புகை பிடிக்க சன்னி சுரம் விட்டோடும். ஆக்கிரணம்: தேத்தான் பூ, அழிஞ்சிப் பூ, வெள்ளை சுண்டை வேர் இந்த மூன்றுஞ் சமன் சேர்த்து பொடி போடவும்.

ஆக்கிரணம் பொடி:-

சுக்கு, மிளகு, அரத்தை, திப்பிலி, கடுகு சமன் சேர்த்து பொடி செய்து வஸ்திர காயம் பண்ணி விலாங் குழையால் பனவிடை நாசியில் ஊதவும்.

ஆக்கிரணம்:- ரசம், கெந்தகம், வெங்காரம், மனோசிலை, திரிகடுகு சமன் சேர்த்து நாள் செய்து பொடி போடவும்.

பூத கலிக்கம்: திரிகடுகு, காயம், பூண்டு, இவை சரி கூட்டி ஊமத்தை குப்பை மேனி, எலுமிச்சம் பழம், திருகு, கள்ளிப் பாலுங் கூட்டி அரைத்து உருண்டை பண்ணிக் கொண்டு காச்சலுள்ளவர்க்கு குப்பை மேனிச் சாத்திலிட்டவும். தலை வலிக்கு செரியாச் சூணத்துக்கு முலைப் பாலிலிடவும். நஞ்சு தின்ற பேருக்கு எலுமிச்சம் பழச் சாத்திலிட்டவும்.

ஒட்டடத்துக்கு மருந்து:-

தேத்தான் காய், உலத்தி இடித்துப் பொடி பண்ணி நெய்யில் குழைத்துச் சாப்பிட வும் எல்லாம் தீரும். இது நசியம் பண்ண எல்லா விடமுந் தீரும்.

மண்டை சன்னிக்கு:-

குப்பை மேனியிலை, வேலியிலை முருங்கைக் கொழுந்து வேலிப் பருத்தி சிறு குறிஞ்சா யிலை, திப்பிலி மூலம் இதை நய்யத் தட்டி நசியம் விடவும்.

காதடைப்புக்கு:-

வலம்புரிக்காய், கடல் நுரை, வேப்பெண்ணெயில் காச்சிக் காதில் விட்டு மூன்று நாளடைத்து வைக்கவும். நெல்லு வேகிற போது மேலே கொட்டங்கச்சி வைத்து மூட அதில் தண்ணீர் இருக்கும். அதைக் காதில் ஊத்தவும்.

ஒட்டடத்துக்கு:-

தேத்தான் மரத்துப் பட்டை கொண்டு வந்து உலத்தி யிடித்து வஸ்திர காயம் பண்ணி புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு வெருகடி பிரமாணம் நெய்யிலாவது, வெண்ணெயிலாவது குழைத்து மூன்று மண்டலம் கொள்ள பதினெட்டு ஒட்டமுந் தீரும். மஞ்சருடன் கொள்ள ஈளை தீரும். வேப்பம் பட்டைச் சாத்தில் கொள்ள வெதப்பு மாறும். கருப்புட்டியில் கொள்ள ஈளை தீரும். வெண்ணெயில் குழைத்துச் சாப்பிட சூலை தீரும். எருமை மோருடன் சாப்பிட உதிரப் பாடு தீரும். காடியில் நசியம் பண்ண மண்டை வியாதி தீரும். நீருடன் குடிக்கப் பெரும்பாடு தீரும். தேத்தான் பழம் சீலையில் வைத்து இளம் வெந்நீரில் பிழிந்து குடிக்க சத்தி பண்ணும். பித்தம் விடும். தேத்தான்வேர் பசுவின் பாலிலிடித்துக் குடிக்கப் பெரும்பாடு தீரும். வேப்பெண்ணெயில் நசியம் பண்ண ஒருத்தலை வலி நிற்கும். நல்லெண்ணெயில் கொள்ள பாண்டு ரோகம் தீரும். இள வெந்நீரில் கொள்ள பித்த சிலேட்டுமம் தீரும். நெஞ்சு நோவு தீரும். பசுவின் கோமியத்தில் குடிக்க ஊது வாதம் சோகை, பாண்டு ரோகம் தீரும். மஞ்சருடன் நெய்யில் கொள்ள பெரு வயறு தீரும். நல்லெண்ணெயில் சாப்பிடக் கடி விடமும் தீரும.

அரோசியத்துக்கு:-

வேப்பலகு அதிமதுரம், நன்னாரி வேர், கோஷ்டம், விலாமிச்சை வேர், மல்லி

கிராம்பு முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், வில்வ வேர் கசாயம் வேரை இடித்து வைத்துக் கொண்டு நேரத்துக்கு பலம்.½ சாப்பிடக் கடி விஷம் தீரும்.

பித்த அரோசியத்துக்கு:-

பருத்திக் கொட்டைப் பருப்பு, நெல்ப் பொரி சுக்கு, ஏலம், சீரகம் முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், மல்லிகை சர்க்கரை பச்சையா இடித்துச் சர்க்கரையைக் கூட்டிச் சாப்பிடவும். நினைத்த போது சாப்பிடவும். தேத்தான் காய், மிளகாய் கொண்டு வந்து வாய் நெகிழத் தட்டி உலர்த்தி பொடி பண்ணி வெண்ணெயில் கொள்ளப் பாம்பு பதினெட்டு நஞ்சும் தீரும். தேத்தான் காய் முசுமுசு காய் கொண்டு வந்து உலர்த்திப் பொடி பண்ணி பசுவின் நெய்யில் குழைத்துச் சாப்பிடக் காசநோவு, பாண்டுரோகம், நீரிழிவு, பெருவயறு தீரும்.

வண்டு கடிக்கு:-

அமுக்குரா கிழங்கு வேர், நல்லெண்ணெயில் எரித்து சாப்பிடவும். பத்து நாளைக்குச் சாப்பிடவும். பத்தியம் இச்சா பத்தியம்.

மூல முளைக்கு:-

நவச்சாரம், யவச்சாரம், வெங்காரம், இருசு வகைக்கு விராகனிடை.உ, அரைத்து வைத்துக் கொண்டு முளையில் ஒரு விராகனிடை குழப்பி போடவும். ஐந்து நாளைக்கு அந்தி, சந்தி தடவவும். தண்ணீர் விட்டுக் கழுவிப் போடவும்.

ரணத்துக்கு:-

ஆறுநாள், எருமைத் தயிர், வடி கட்டிச் சோற்றைப் பிசைந்து கட்டவும். களிம்பு, வெள்ளைக் குங்கிலியம் பலம்.க, பொடி பண்ணி வெள்ளை மெழுகு பலம்.க, சட்டியை காய வைத்து மெழுகு உருகிற போது குங்கிலியம் பொடியும், வெண்ணெயும் போட்டு தண்ணீரில் விடவும். செங்கொட்டையை நாலா நறுக்கி கெந்தகத்தை பொடி பண்ணி கரண்டியில் போட்டு நல்லெண்ணை விட்டுக் காச்சி கரண்டி பற்றினவுடனே தண்ணீரில் விட்டு வழித்து இரணத்தில் தடவவும். மிருதார் சிங்கியை நெய் விட்டு வட்டி யிலரைத்துப் போடவும்.

தண்டு ரத்தத்துக்கு:-

அம்மன் பச்சரிசியும், கிராம்பு, சீரகம் வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் கொடுக்கவும்.

ஏலாதி குழம்பு:-

சீர் சிறந்த தன்மந்திரி பாதம் போற்றிச் செப்புகிறேன் ஏலாதி குடுகு தன்னை
தார் சிறந்த ஏலமும் மதுரம் கோஷ்டம் தனம் பெரிய சடாமஞ்சி கொத்தமல்லி
வார் சிறந்த சீரகமும் பறங்கிப் பட்டை வகையான மிளகுடவே தாளிச
பத்திரியும்
பார் சிறந்த கோரோசினையும் சுக்கு மூலம் பாங்கான கிராம்புடனே பச்
சைக் கற்பூரம்

ஒக்க நிறையாய் வகைக்கு ஒரு பலந் தானுக
ஒக்கவே வறுத்திடித்து ஒன்று தாக வேத்தியுள்ள சர்க்கரையும் பலந்தானுய
விதமாக விளக்கெண்ணெ விட்டு மெள்ள முத்திதரு மிளகு தக்காளிச் சாறு
முதிர்ந்த பதந்தனிற் கொட்டிக் கிளற வாயே.

கிளறியே உள்ருட்டி ஒரு கரண்டி அந்தி சந்தி
பளமை பெறப் பத்து நாளுன்பிராகில் திருமது வியாதிகள் தாறு கேளீர்
வழவழவென்று ஒழுகி விழும் வெள்ளை தாரம் வாகையாகச் சீ விழுதல்
ரெத்த மேகம் தந்தி நல்லமுடன் தாழ்மையாகும்.

ஆது மினிப் பிரமேகம் மண்டை சூலை அரையாப்பு அரிகிரந்திரண்ட சூலை
போகுமடா எலும்புருக்கி உள்க் காச்சல் தீரும் பொல்லாத புண்களெல்லாம்
இரணங்களோடே
யேகுமடா கண்ணெரிவு கால் கை நோவு யீளையடா பிரமேட்டின் புகைச்சல் தீரும்
பாகமுடன் பனிரெண்டு நாளுண்பீராகில் பறக்கு மென்று முனி யுரைத்தார் பலுர்த பாரே.

சகல பிரமிக்கு:-

தேங்காய்ப் பாலில் கருப்புட்டி போட்டுப் பாகு காய்ச்சி மூன்று நாள் சாப்பிடவும். பத்தியமில்லை. மறுபடி குப்பை மேனிச் சாறு விராகனிடை. , ஒரு பணவிடை நல்லெண்ணெயுங் கூட்டிச் சாப்பிடவும்.

ஓரண்ட வாதத்துக்கு:-

ஆறு தழை கொண்டு வந்து யிடித்து நாழி தண்ணீர் விட்டு பிழிந்து வைத்து மூன்று நாளைக்குச் சாப்பிடவும்.

நீரளிவுக்கு:-

ஆவாரை அரிசி படி.க, கொண்டு வந்து பாளையில் சீலையைக் கட்டி பிட்டாக வைத்து அரைத்துச் சாப்பிடவும்.

தலை பிடிப்பு, கபால வாய்வு, நீர்க் கட்டு சோர்வை ஒருத்தலை வலிக்கு:-

வேலிப் பருத்தியிலை, எருக்கிலை வேப்பிலை இந்த மூன்றுஞ் சமன் சேர்த்து அரைத்து சாறு பிழிந்து காய்ச்சிப் போடவும். சக்கையை ஒத்தடம் தலை நெற்றி பிடரியில் பூசவும். அரத்தை சதகுப்பை சுக்கு சமன் சேர்த்து நொச்சிச் சாறு விட்டு அரைத்து கொதிக்க வைத்து பூசவும். ஒரு தலைக்கு பாகைத் தழையும், ஈர வெங்காயம் மிளகு இந்த மூன்றும் நய்ய நருக்கி துணியில் வைத்துக் கண்ணில் பிழியவும்.

சீரிப் பூச்சிக்கு:-

ஏலம், சிரங்கை நறுக்கி விளக்கெண்ணெயில் போட்டு மூன்று வாழைப் பழமும் போட்டுத் தண்ணீர் பாளையில் புதைத்து ஆறு நாள் எடுத்து யேழாம் நாள் பழமும் யெண்ணெயும் சாப்பிடவும்.

பித்த வாய்வுக்கு:-

சாறுப்பிடித்துச் சமன் எருக்கம் பால் கூட்டி அரைத்து வில்லை செய்து கோழிப் புடமிட்டு பாலில் தேய்க்கவும்.

வண்டு கடித் தயிலம்:-

சிவனார் வேம்பு கொண்டு வந்து சிறுக நருக்கி உலத்தி ஒரு பானை நிறைய விட்டு புங்கம் விரை கொண்டு வந்து பருப்பு எடுத்து ஒன்று இரண்டாக நருக்கி மூன்றுபடி பருப்புக்கு கால்படி நல்லெண்ணை விட்டு பிசறி நன்றாக உலத்தி சிவனார் வேம்பு கொண்டு வந்து சிறுக நருக்கி உலத்தி ஒரு பானையை நிறைய விட்டு புங்கம் விரை கொண்டு வந்து பருப்பு எடுத்து ஒன்று இரண்டாக நருக்கி மூன்று படி பருப்புக்கு கால்படி நல்லெண்ணை விட்டுப் பிசறி நன்றாக உலத்தி சிவனார் வேம்புடனே கலந்து பானையிலிட்டு தயிலம் இறக்கி அந்தத் தயிலத்தில் இரண்டு பணவிடை எடுத்துப் பொரி மாவில் பிரட்டிச் சாப்பிட மேலே கண்டு யிருக்கிற வண்டுகடி, செட்டை கடி, காணாக் கடி, மேல் தடிப்பு, படுதாமரை இப்படி மேலெழும்பி யிருக்கிற தடிப்புகளுக் கெல்லாம் பூசவும் தீரும்.

தாளிச பத்திரி சூரணம்:-

தாளிச பத்திரி விராகனிடை.க, திரிகடுகு வகைக்கு விராகனிடை.க, கிராம்பு விராகனிடை.க, திப்பிலி மூலம் விராகனிடை.6, சுத்தி பண்ணின சிவதை வேர் விராகனிடை 60 இது வெல்லாஞ் சூரணம் செய்து சர்க்கரை பலம்.8, கூட்டி வெருகடி பிரமாணம் வெந்நீரில் கொள்ளவும், விரோசனம். சுரத்தின் மேல் மூல வாய்வு, மலக்கட்டு, திரிதோஷம் இது வெல்லாம் தீரும். இச்சா பத்தியம்.

சிவதை வேர்ச் சூரணம்:-

திரிகடுகு, திப்பிலி மூலம், முத்தம், வாய் விளங்கம், தாளிச பத்திரி, கோஷ்டம், நெல்லிமுள்ளி, சீரகம், ஓமம், கிராம்பு, கடுக்காய், கடுகுரோகணி, வகைக்கு விராகனிடை.க, சுத்தி பண்ணின சிவதை வேர் சரியிடை கூட்டிச் சூரணம் பண்ணிச் சர்க்கரை பாதி சேர்த்து வெந்நீரில் கொள்ளவும். இதுக்கு அயமாதிச் சூரணம் என்று பெயர்.

சரபங்க வில்வாதி லேகியம்:-

வில்வவேர், முக்காவேளை, சங்கம் வேர் வகைக்கு ஊக்கு ஒன்று, சித்தா முட்டி பேருமுட்டி கண்டங்கத்திரி, சாறணை, விலாமிச்சி, சிறு செருப்படி தென்னம் பூ, கீழாநெல்லி, வகைக்கு படி.க, பால் படி. , பனைவெல்லம் பலம்.10, திரிகடுகு, ஓமம், சீரகம், வால்மிளகு, யேலம், கிராம்பு, தாளிச பத்திரி, லவங்கப் பட்டை, ஆனைத்திப்பிலி வகைக்கு பலம்.க, இவை வறுப்பு இடித்து சூரணம். பசு நெய் படி.க, தேன் படி.½, லேகியம் பதமா யெடுத்து சேராய்ச் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி பாண்டு, பித்த வெட்டை, வாய்வு, மயக்கம், கிரகணி மூலம், உடம்பெரிவு, பொருமல், உப்பிசம், ஆயாசம் இவை யெல்லாம் தீரும்.

கண்டங் கத்திரி லேகியம்:-

இஞ்சிச் சாறு, கண்டங்கத்திரிச் சாறு, நெருஞ்சிச் சாறு, முள்ளங்கிச் சாறு, எலுமிச்சம் பழச் சாறு வகைக்கு படி.க, பசுவின் பால் படி.க, பனைவெல்லம் பலம்.8, திரிகடுகு, சீரகம், ஏலம் கிராம்பு, தாளிச பத்திரி வகைக்கு பலம்.க, சூரணம் பசுவின் நெய் படி.½, தேன் படி.½ விட்டுக் கிண்டி லேகியம் சந்தி, சந்தி புன்னைக் காயளவு சாப்பிடவும். வாய்வு, பித்தம், சூலை, கணவாந்தி, இசிவு, அரோசியம், அக்கினி வேஷம் குன்மம், பொருமல் இவை தீரும்.

சிந்தாதி லேகியம்:-

ஆம மாத்தைக் காடி.10, புளித்த மோர் படி.10, புளியிலே ஒரு நாள் ஊறப் போட்டு யிடிக்க அடபாகமாக காய்ச்சி இறுத்து கையாந்தகரைச் சாறுபடி.உ, இஞ்சிச் சாறு படி.க, சீந்திக் கொடிவேலி, நன்னாரி, சிறதேக்கு வகைக்கு பலம்.5, இடித்து எட்டு படி தண்ணீர் விட்டு அட பாகமாகக் காய்ச்சி நல்ல வெல்லம் சேர்த்து பசுவின் பால் படி.உ, திரிகடுகு, திரிபலாதி, கிராம்பு, சீரகம், கோஷ்டம், தாளிச பத்திரி, ஓமம், அரக்கை, மல்லிகை, லவங்கப்பட்டை, அக்கிராகாரம், திப்பிலி, வால்மிளகு, சாதிக்காய், அதிவிடையம் வகைக்கு பலம்.1½ இவை வறுப்பு சூரணம் தேன் படி.½, நெய் படி.½, பதமாய் லேகியம் எடுத்து சாப்பிடவும். பித்த வெட்டை, க்ஷயம் குன்மம், கிராணி, வாய் கசப்பு, வெள்ளோக்காளம், மூ கால், கை யெரிவு, வாயூறல், மந்தம், கை கால் காந்தல் இவை தீரும்.

பர்த்த தீபாக்கினி லேகியம்:-

திரிகடுகு, ஓமம், சீரகம், ஏலம் பலம்.¼, மத்த ஐந்தும் வகைக்கு பலம்.க, இவை வறப்புச் சூரணம் பசுவின் பால் படி.உ, பனைவெல்லம் பலம்.உ, யிவை வறுப்பு சூரணம் பசுவின் பால் படி.உ, பனை வெல்லம் பலம்.8, பதமாய லேகியம் அந்தி, சந்தி புன்னைக் காயளவு சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி வாய்வு, வாய்வு, உஷ்ணம், பித்தம், உளைவு குத்து பொருமல் இவை யெல்லாந் தீரும்.

வில்வாதி லேகியம்:-

மகிமைக்கு வில்வாதி லேகியத்தை வகையாகச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
மகிமையுள்ள வில்வ வேரிரண்டு பலந்தான் வாசாக நொறுக்கியே யிரு நாழி நீரில்
மகிமையுள்ள பாண்டத்திலிட்டு ஈரும் வலம் பெறவே நாலொன்றாய் குறுக்கிச் சாத்திக் கட்டி
மகிமையுள்ள சர்க்கரை தையாறு பலத்தை வத்தி நின்ற கசாயத்தில் மாட்டுவாயே.

மாட்டுவாய் போட்டதிலே கரைத்துக் காய்ச்சி வற்றியது தூம்பாகு நிற்கும் போது
மாட்டுவாய் மிளகு பொடி செவியந் திப்பிலி வகை யொன்று படி காலாய் வைக்கக் கேளு
மாட்டுவாய் யேலம் லவங்கந்தாளும் மகத்தான சிறு நாகப்பூத் தாளிச பத்திரி கிராம்பு
பலமரை தாளித்தலையுங் காய வைத்து தூளாலாட்டி இயல்பாள சாரப் பாகில
பருங் தூளம்பாலத்தி வரும் போது கடை மருந்து தூ றுகளை வடிகட்டி தூளாலியதை
வாகுடனே கிண்டு வெத்தியாம் லேகியமா மதிலே நெய்தான் விட்டிடுவா யாமாக்கு
விரவிக் கிண்டி யந்த லேகியந் தானுண்ணக் கேளு கேடில்லை கொட்டைப் பாக்களவு
அந்தி சந்தி கிண்டிய லேகிய மருந்தை வைத்து வலி குன்மம் கின் கிளித்த யிருமலோடு
யீளை காசங் கிண்டிய லேகியந்தான் நெஞ்செரிப்பு வாய்வு கிராணி அதிசாரமொடு
பித்த காமாலையொடு கிண்டிய லேகியத்திலுள் திரேகந் காந்தல் கிளர் தாக
சொற்பமொடு வாதந் தொந்திப் போ தொந்தித்த பல ரோகம் முஷ்ண ரோகம்
சோகையொடு விஷ பாண்டு சரங்கம்ப்பிசங்கள் தொந்தித்த வயத்து ளைச்சல் கோஷ்டம்
வாந்தி தடர்ச்சியாய் வரும் மாந்தம் பித்த ரோகம் தொந்தித்த நீரேத்தம்
வீக்கம் மலக்கட்டு தலையாத தலை நோவுந் துயரந் தீரும். தொந்திப் பாலேகியத்தை
மண்டலந்தான் கொள்ளுத் சூட்டுறேன் குண்டலாதி லேகியத்தைச் சூட்டுறேனே.
பத்தியந் காரப்பு நெய் பால் அவரைப் பருப்பு பறு தகத்தும் வருதலைக்
காய் முருங்கைப் பிஞ்சாம் தனி நெல்லி அண்டமொடு விரால் தெளி சுடு மீன்
வெத்திபுரி வெள்ளாடு காடை முசலாடும் மீன் வகைக்கு உள் தெல்லா முலக்கிட்டுக்
கூட்டு அந்தியிலே விடாமல் மண்டலந்தான் கொள்ளு மகாரோயுந் தீருமென்ற யிந்த
மகிமை பாரே.

வில்வாதி லேகியம்:-

வில்வ வேர் பலம்.50, நெல்லி வத்தல் பலம்.10, விலாமிச்ச வேர் சீந்தித் தண்டு, முசுமுசுக்கை வேர், நிலப்பனைக் கிழங்கு, தண்ணி யிட்டான் கிழங்கு, கோரைக் கிழங்கு, கொத்துமல்லி, சித்தாமுட்டி வேர், சந்தனக் கட்டை, நன்னாரி வேர் வகைக்கு பலம்.10, வில்வ வேர் மேல் பட்டை போக்கி சீவி நன்றாய் யிடித்து மத்த வேறு வகையு யிடித்து பதக்கு தண்ணீர் விட்டு மூன்று படியாய் காய்ச்சி வடிகட்டி அதில் சர்க்கரை பலம்.50, இஞ்சிச் சாறு படி.க, கரப்பான் சாறு படி.3/4, செவ்விள நீர் தண்ணீர் படி.3/4, மெட்டி மாதளஞ் சாறு படி.க, தண்ணி விட்டான் கிழங்குச் சாறு படி.1½, வெத்திலைச் சாறு படி.உ, பூனைசிக் காய்ச் சாறு படி.1½, எலுமிச்சம் பழச் சாறு படி.உ, இவை யெல்லா மொன்றாய்க் கலந்து குழுக பாகமாகக் காய்ச்சி சர்க்கரையைக் கரைத்து வடிகட்டி அதிலே விட்டு கற்கம் இஞ்சி காய்ந்த வத்தல் படி.க, பசுவின் நெய் விட்டு வறுத்து இடித்துக் கொண்டு முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், அதிமதுரம், கிராம்பு,

சிறுநாகப்பூ, லவங்கப் பத்திரி, விலாமிச்சை வேர், கொத்தமல்லி, சடாமாஞ்சி, சந்தனக் கட்டை, கோஷ்டம், தாளிசை பத்திரி, சீரகம், கருஞ்சீரகம், வாய்விளங்கம், நெல்லி வற்றல், தானிக்காய், கோரைக் கிழங்கு, ஓமம், நன்னாரி வேர், கடுகைநீர் சாதிக்காய் சவ்வு லவங்கப் பட்டை வகைக்கு பலம்.க, தேசாவரம் பலம்.உ, சுக்கு பலம்.உ, மிளகு பலம்.3, திப்பிலி பலம்.4, குங்குமப்பூ பலம்.½, கஸ்தூரி பலம்.. இவையெல்லாம் இடித்து வடிகட்டி பாகு பதத்தில் தூவிக் கிண்டிக் கொடுத்து தேன் பலம்.உ, விட்டுக் கிண்டி பதத்திலெடுத்து கலசத்தில் வைத்து பதினெட்டு நாளைக்கு நெல், பானையில் வைக்கவும். தினம் கழற்சிக் காயளவு சாப்பிடவும். இதற்குத் தீரும் வியாதி சோகை, குன்மம், பாண்டு, காமாலை இருமல், குடல் பிரட்டு வாய்வு, அரோசிகம், சத்தி விக்கல், கிராணி, ரெத்த காசம் மயக்கம் சூலை, எரிவு, பித்தம் இவை தீரும்.

<u>சித்திர வல்லாதி லேகியம</u>:- 21.3.64.

சித்திர மூலம் வெள்ளறுகு சிவனார் வேம்பு சங்கம் வேர்
முத்திய தேங்காய் நெத்து மூலமாய் அருக்கிறு வேர்
புத்தின் முளைத்த வெள்ளெருக்கு போதவே சிவ்வி விலாத்தி குமிழம் வேர்
சத்தி முாசறுவை சாதகமாய் செங்கத்தாரி குன்றி வேர்
உச்சிகம் வேப்பிலை வித்து உறவான நீரெட்டி பிரப்பங் கிழங்கு
சத்திய கருஞ்சீரகம் காசை சீரகர் நாகே
முத்தியா பூத விருகூடிம் நல்ல மூலமாய் வாத சுரப்பான் பட்டை
சத்தியு கெந்தகர் அரிசி சதிரான சூதமொடு தாரம் தாளகம் ரெண்டும்
சேர்த்து விக்கார மாந்கலம் என்று வகைக்கு சேர் கொண்டு
முத்திய செங்கொட்டை நாமம் முதிரும் பறங்கிப் பட்டை ரெண்டுகை திறமாக
பிடித்து கணபதிக்கு முன்பாக தீபம் கொடுத்து சித்தி வல்லாதி யென்று
முனி செப்பினார் சீஷருக்கு உபதேசமாக பத்திரமாக யெடுத்துப் பாண்டத்தில்
வைத்து கொட்டைப் பாக்களவு ஒரு மண்டலமிரு போக கொண்டால் மார்க்கமாய்
வியாதியை வகுத்து உரைத்தேனே.
முத்திய சூலை கிரந்தி முடக்கு கடைப்பு பிடிப்பு திமிர்ப்பு பத்த மெங்கள்
பாங்கான கையில் ஊறல் வெருப்பு வத்தி உடம்பு சிரங்கு வகையாய் பிருவெட்டு
கடி விஷம் முதலாய் சத்திக் திமிர்ப்பு வெங்குஷ்டம் சொல்லாமல் போகுமே
வல்லாதி கண்டாய் பொக்கடி போல் வெடித்து நல் புண் போலே உடம்பெல்லாம்
வெம்பாய் கிறிந்தது போலே நல்ல சுருள பாதத்தைக் கீரக வெடித்து அத்திக்
கிரந்தி நாக்காய் ஊதே பறங்கி நாள் கிரந்தி தானே சித்திர வல்லாதி கேளே
நீ கண்ட பஞ்சு போல பாறு கண்டாயப் போல் பத்தியம் சொல்வேன் யிப்போ
நல்ல பாசிப் பருப்பு துவரம் பருப்பு முத்திய மீரம் கத்திரி பிஞ்சு முருங்கை
மிளம் பிஞ்சு அ ரக்கரை தாறும் சாத்தாறும் நெய்யும் பாலும் மோரும் சதிரான
வெள்ளாடு மீன் விரு கோர்வை சித்தா மனைக்கெண்ணை சீரா போறு---வெந்நீர்
புத்திய வல்லாதி தன்னைப் போதரவா நோரு கண்டு பத்திரமாக கொள்ள
நல்ல பத்தரூகே ஆழ கண்டு பத்தியம் சொல்வர் உஷ்டனுங் கண்டா மிருக்கி
ஒறவான பெண்ணையைமுதச வெவ்வர் இத்தினையு நீருமென குருதியின்பமாய் சொன்னார்
அம்பாகத் தானே போற்றி

<u>வச்சிர பதி லேகியம்</u>:-

ஆச்சப்பா விடலிதுள்ள மந்த வாய்வு ஆகாத குன்ம மெட்டு மேக சூலை
மூச்சப்பா உள்மூலம் பிற மூலந் தான் உயர்ந்த வரும் நோய்களும்
முன்னாத்திருவத்தக்கும் போச்சப்பா இப்படியே அயன் கொண்டாப் போலே
பொற்சம்மலம் போலிருக்கும் தாதுவிர்த்தி பேச்சப்பா லேகியத்தின் விபரமெல்லாம்
பெருமையுடன் பேசுகிறேன் வகையாய்க் கேளே.
கேளப்பா சாதிக்காய் பலந் தானென்ற செடியான ஏலம்த் பலமு ரெண்டு
வாளப்பா வால்மிளகு பலமு மொன்று வகையான சன்ன லவங்கப் ப பலம் ஒன்று
நீளப்பா சீரகந் தான் பலமே அரை திறமான கொடி(வேலி)பலமும் ரெண்டு
நாளப்பா கோஷ்டமது பலமு ரெண்டு நலமான அதிமதுரம் பலந்தான் அய்ந்து

அஞ்சாதே அக்கிரகாரம் பலமு ஒன்று அடவான பறங்கியின் வேர் பலமும் பத்து
துஞ்சாதே குங்குமப்பூ பலமரைக்கால் சுகமான கோரோசினை பலமுங் கால்தான்
மிஞ்சாதே ரவியிலை உலர்த்தி யிடித்துக் கொண்டு விடுக உலத்தி யதை யெடுத்துக் கொண்டு
மஞ்சாசம் பசுவின் நெய்யை உலையா வைத்து வகையோடே மெழுகு போல் தூவிக் கிண்டே.
கிண்டயிலே பழச் சாற்றில் சர்க்கரையும் போட்டு கிருபையுடன் கலக்கியதை வாத்துவாக்
பண்டாரம் பதமாக மெழுகொரட்டமல் பதுமல் கலசத்தில் வைத்துக் கொண்டு
வண்டாரும் புங்குழலாள் மாதபூசை வகையோடே செய்து பின்பு உண்டு வா நீ
தண்டாரந் தாய் பதத்தை மறந்தாயானால் தவறி விடும் விக்கதயெல்லாம் சாற்றுறேனே.

சந்தனாதி தயிலம் :-

சாற்சுறேன் சந்தனாதி தயிலமப்பா தப்பாமல் செய்தவற்கு யெல்லாஞ் சித்தி
ஆத்துறேன் அதிமதுரம் அக்கிருகாரம் அழகான கோஷ்டமுடன் தேவதாரம்
போத்துறேன் சந்தனமும் சுக்கு யேலம் புகழாகச் சரியிடையாய் வாங்குவாயே.

வாங்குறேன் பழச் சாறு சேர் தாளென்று வளமான தென்னம் பால் சேர் தாளென்று
பாங்கு பெற ஆவின் பால் சேர் தாளென்று பதமேல் நெல்லிக்காய் பால் சேர் தாளென்று

பாங்காக பசுவின் நெய் சேர் தானஞ்சு கூறுகிறேன் முசுமுசுக்கை சேர் தாளென்று
வழங்கிறே யிவ்வளவுங் கூட்டி வைத்த நன்மையாய்க் கசாயத்தி லூரத்திக் கொள்ளே.

கொண்ட பின்பு அடுப்பில் வைத்து தணலை மூட்டி கோப்புடனே பக்குவத்தில் பொடியைத் தாவி

மூட்டி பவல் லெரித்தாக்கால் முரித்துப் போகும் முரித்திருந்த கமலத் தீயாகப் பாரு
கண்ட பின்பு தயிலத்தை யிறக்கிக் கொண்டு கன்னிபுட பூசை நன்று கமமாய் செய்து
மண்டலந்தான் முன்னே மட்டும் முழுகுநேர்த்த மகத்தான பிணிகளொன்று மாறிப் போமே.

மாறமடா நாள் செல்ற உதிரம் மேகம் மகத்தான உள் மூலம் பிற மூலந்தான்
தாருகின்ற கொருநோவும் மகோதரந்தான் சூலையொடு பித்த மெல்லாந் தொலைந்து போகும்

யேகுகின்ற ரேசகந்தான் செய்வோர்க்கப்பா யெல்லை சொல்வேன் ஆரோக்கியம் யேறும் யேதும்

மாயுகின்ற உலகத் தோனன்டாலும் மகத்தான பிணி யெல்லா மயங்கிப் போமே.

இடி மருந்து : ராம பாணம் :-

இடி மருந்த அரிதாரம் காந்தம் என்ன எட்டி விரை செங்கொட்டை சித்திர மூலம்
வடி மருந்த ரசம் கெந்தி மஞ்சள் ஓமம் மாசக்காய் சாதிக்காய் வசம்பு மிளகுள்ளி
இடி மருந்த சொள்ளுக் காய் தருச தத்தம் சோளி முட்டை இந்துப்பு கோஷ்டம் கால் கோல்

அடி மருந்து அமுக்கிரு யிடை சமபாகம் ஆக்கியே யிடி கலசமிரு அரைபக் கேள்

அரையிறேன் யோனி திப்பிலி லிங்கம் திப்பிலி மண்டூரத்தி வரைப் புன்களையாப்பு புன்கள்
விறையிலே முக்காரத்த கரப்பன் சூலை இடி புத்தகுறி புத்த ஞாலப்பித்த
விரையிறேன் குறை நோவு குஷ்டம் விலி கரப்பன் வில தண்டிய குதல் வெளுனீர் புத்த

முறையுடனே மண்டலமே தின்னலப்பா மூட்டோடே வியாதி யெல்லா மொழியு மென் பாரே.

என்பீரே பத்தியந் தாவிதக்கில்லை யப்பா யிடி மருந்து போல் ராமபாண மப்பா
தின்பீரே சிறு சுண்டைக்காய் வீதந் தானே திலம் மோருஞ் சோறுமுண்டு நீர்பிராசில்
முன்பீரம் பழம்போது முழுகு வாய் நீ முசியாமல் மண்டலமே தின்றுவாரும் பொன் போலே தேகமதா வளர்த்துப் போகும்

பூவை யரைப் பிரமுதே புருடன் மாரே.
புருடருக்கு மட்டுமல்ல பூவையர்க்கு மிருக் கட்டும் மூன்று மாதம்
மிருடருக்குந் கருகாலை யிவியேவுது பெந்தெந்த நோய் வரினும் யெமன் வந்தாலும்
திருடருக்கு இடி மருந்து சித்த விளையாடு மடா சிவன் மால் வேதன்
குருடருக்கு இந்த முறை சித்தியாகும் கோதண்ட மிகுந்த சரபானந் தானே.

சகலத்துக்கும் குழித் தயிலம் :-

சரமாரி அலிசம் விரை புன்கம் வித்து நகரை விரை புன்னை விரை கடுக்காய் ரகர் கோல்

அறமாரி நிம்பனத்தி மிளகு நாழி உடன் கலந்து பின்பு மதைப் பாண்டத்திட்டு

நிறமாறிக் குளித் தயில மிறக்குவாய் நீ நிறவான பூசை செய்து யெடுத்து வைய்யே.

வைத்திருந்த தயிலமதில் கொஞ்சந் தொட்டு மயிர் முனையில் தடவி விடக் கருத்துப் பே
யெய்த்திருந்த வெடி குலை கண்டமாலை யென்பர் சொரி சிரங்கு காய நெல்லி
உத்திருந்த செட்டோடுந் தயிலந் தன்னை ஒடி ஒறை நோய்களைக் கொல்லா பூசிப் பாரு
முத்திருந்த நெத்துப் போல்லாமெப்பா சொன்னேன் முகண்டக் குளித் தயில மருநுவாயே.

தலைவலி, மண்டை வலி, வாதம், முகவாதம், வாய்வு, சிலேட்டுமம், சன்னி அதிசாரத்துக்கு செருளாதி தயிலம்:

பாதிரி வேர், முன்னை வேர், பெருவாகை வேர், பெருங்குமிழ் வேர், பேராமுட்டி வேர், கண்டங்கத்திரி வேர் வகைக்கு பலம்.10, இது வெல்லாஞ் சேர்த்து இடித்து சாணி நீர் விட்டு ஒன்றாய்க் கலந்து அதில் கிரிகடுகு, தேவதாரம், செங்கழுநீர் கோஷ்டம், பேரேலம், அகிலம், ஒரிதழ்த் தாமரை, நாகப் பூ, மல்லிகை, சடாமாஞ்சி, சயிலேயம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், இலவங்கம், சாதிக்காய் பச்சிலை, நாளிச பத்திரி, மஞ்சக்காசு, நன்னாரி வேர், சேரக் கூட்டி அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து உள்ளுக்குங் கொண்டு தலை உடம்பெங்கும் பிடிக்கவும். இதைக் தீரும் வியாதி தலைவலி, மண்டை வலி, வாதம், முகவாதம், வாய்வு, சிலேஷ்மம், காச்சல், சன்னி, அதிசாரம், க்ஷயம் இவை யெல்லாந் தீரும்.

தலை முழுகத் தயிலம்:-

சிந்திச் சாறு படி.உ, ஒரிலைத் தாமரைச் சாறு படி.உ, சீதா செங்கழுநீர் சாறு படி.உ, புளியிலைச் சாறு படி.உ, ஆனை கட்டுக் கொடிச் சாறு படி.உ, அமுக்கிரா சாறு படி.உ, குப்பை மேனிச் சாறு படி.உ, இடம் புரிச் சாறு படி.உ, ஆக படி.16-ம் புங்கம் பட்டை, கடலாஞ்சி பட்டை, முருங்கைப் பட்டை இவை வகைக்கு பலம்.3, கூட்டி இடித்துப் போடவும். ஆக இரண்டு வகையும் கலந்து அதில் சீரகம் ஓமம், கோஷ்டம், திப்பிலி, சிறுதேக்கு, நாகப்பூ, அரத்தை, இலவங்கம், சாதிபத்திரி, வெட்டிவேர், விலாமிச்சை வேர், பூலாங்கிழங்கு, அதிவிடயம், கச்சோலம், கஸ்தூரி மஞ்சள், செண்பகமொட்டு, வெடத்தை நகரம் இவைகள் வகைக்கு விராகனிடை. 3, இடித்து சூரணம் பண்ணிக் கூடக் கலந்து பசுவின் நெய் படி.$1\frac{1}{4}$, மேற்படி தயிர் படி $2\frac{1}{2}$, பால் படி.5, நல்லெண்ணெய் படி.$1\frac{1}{2}$, எருமை நெய் படி.$1\frac{1}{4}$ இவ்வளவும் கூட்டி கலந்து நாலு நாள் சிறுக எரியிட்டு ஐந்தா நாள் மஞ்சள் நிறமாகப் பார்த்து வடித்து அதில் பச்சை கற்பூரம் விராகனிடை.க, கோரோசனை விராகனிடை.5, கூடம் விராகனிடை.5, பொடி பண்ணிப் போட்டு இறக்கி வைத்துக் கொண்டு இந்த யெண்ணையை தேய்க்கிற முதல் நாள் ராத்திரி புகையிலை, புளி தவிர்க்கவும். பச்சை மாங்காயுந் தவிர்க்கவும். தலைக்கு யெண்ணை தேய்க்கவும். அரை நாழிகைக்குள்ளாக பச்சை சீயக்காய் அரைத்து வெந்நீரில் முழுகவும். புளி தவிர்க்கவும். போசனம் பண்ணுகிற போது மிளகு, திப்பிலி எள்ளுப் பொன்னிறமாக வறுத்துப் பொடித்து ஒரு விராகனிடை பொடியும் போட்டு பச்சை யெண்ணை போட்டுச் சாப்பிடவும். இது ராஜ வசியக் யோக்கியம். ராஜவசியம். சரீரம் நிறம் பெறுக்கு மன்மதம் அசீரணம் வரும். தீபன முண்டாகும். லேபன தயிரியம் பெலமுண்டாகும். கர்ம வியாதிகளும் போம்.

காட்டு வாதத்துக்கு தயிலம்:-

நொச்சியிலை, கழுதாழை ஆடாதோடை, கொடியரசு குன்றி சடைச்சி, நிலவாகை வெள்ளருகு, சதுரம், நாகமல்லிகை சமூலம், நாத்தச் செலை, குப்பை மேனி பாவட்டையிலை ஆக 12-க்கு சாறு படி.$6\frac{1}{2}$ இரண்டரைப்படியாகக் காய்ச்சி வைத்துக் கொண்டு அதிலத் சென்னை படி.$2\frac{1}{2}$விட்டு கடுகு சிரண்ட பதமாக ஒரு கரண்டி சாப்பிடவும். மேலுக்கு தலைமேல விடவும். பிடிப்பில் தடவிப் பிடிக்கவும் தீரும்.

நரம்புச் சிலந்திக்கு:-

மாட்டின் ஈ பிடித்துக் கருப்புட்டி போட்டுஅரைத்துக் கொட்டைப் பாக்களவு ஆகுக் உள்ளுக்கு கொடுக்கவும். உப்பு, புளி ஆகாது. வெள்ளாட்டுப் பால் கூட்டவும்.. ஏழா நாள் தலைக்கு தண்ணீர் விட்டு வாகை யிலையை சிறுநீர் விட்டு வதக்கிக் கட்டவும். மருந்து சாப்பிடுகிற போது யெருக்கு யிலை சிறுநீர் விட்டு வதக்கி கட்டவும். வேலிப் பருத்தியிலை சிறுநீர் விட்டு வதக்கிக் கட்டவும்.

கொடிவேலித் தயிலம்:-

நலமான கொடிவேலி வேர் பலந்தான் பத்து நன்றாக யிடித்திட்டு பதக்கு நீரில்
வயமாகக் காய்ந்து வத்தி யெட்டொன்றாக்கி வளமான நல்லெண்ணை நாழி விட்டு
நியமாக வெண்ணை புன்னைக் காயளவு யிட்டு நிலையான சரகந் தான் பலமே ரெண்டு
செயமாக அரைத்ததனைப் பாலிற் சேர்த்துச் சீரான மெழுகு பதமான போதே.

அவடமிது வடித்து முழுகும் போது ஆலந்த வாயுவுடன் தாம வாய்வு
தேமலுவு குழலார்கள் வாத மெல்லாஞ் சிறு சொறியுந் சிவவு பிசச் சிரங்கு குஷ்டமும்
போனதொரு அரையாப்புக் கிரந்தி குலை புண் புரைகள் பொடி பிளவை வெடிப்பு வக்கை
நாமினைவே வந்த நோயிக்கிவையுந் தீரும் நல்லதொரு தயிலமது நாடிப் பாரே.

சீரகத் தயிலம்:-

பாரப்பா சீரகமோ பலந்தான் படி தாளென்று பதமாக யிடித்ததனைத் தானிநீரில்
நேரப்பா யெட்டொன்றாய் கசாயம் வாங்கி நேராக யெண்ணை படிதான் சேர்த்து
காரப்பா கார்போக அரிசி பலம் ரெண்டு கசாயம் விட்டரைத்துக் கலக்கிக் கொண்டு
யேறப்பா மெழுகு பதமாக வாங்கி யியல்பாக முழுகி வரக் குணத்தைக் கேளு.

குணமென்ன குன்ம மெட்டு வாய்வு பத்து குட்டமொடு சூலை தலையும் குண்டலமும் கேளு
மணமென்ன வாந்தி பித்தங் கிறுகிப்பு வாயுவிலே வந்ததொரு சோகை பாண்டு
கணமென்ன உஷ்டண ரோகங்கள் பித்தம் கப கபாலத்தில் சூடான கபநீர்க்கிட்டு
பணமென்ன நோய் தீரும் மருந்து முண்டோ பாரிதன்னே மூளைந் தெளிந்த மூலிகைக்கும்
பாரே.

சன்னிக்குத் தயிலம்:-

போமப்பா சன்னி யெல்லாம் கடலே புக்க புகழான தயில மொன்று சொல்லக் கேளு
நாமப்பா வேப்பெண்ணை புங்கெண்ணை நலமான புன்னை யெண்ணை பசுவின் நெய்யும்
காரப்பா காட்டிலா மணக்கினெண்ணை கருவாகச் சமமுக சேர்த்துக் கொண்டு
காணப்பா குக்கிடத்தின் முட்டை பத்து மாலான மஞ்சளைத் தான் கூட விட்டு
மயங்காதே கடை மருந்து சொல்லக் கேளு
சாலான சாதிலிங்கம் தீமுருகல் சந்தான கெந்தி ரச பாசாணந்தான்
ஆலான நாபியொடு மிளகு திப்பிலி யழகான ஆனையுட திப்பிலியும் போடே.

போடப்பா லவங்கமொடு நேர்வாளந் தான் புகழான களஞ்சி நிறை சமமாய்க் கூட்டி
நாடப்பா சித்திர மூலக் கசாயந் தன்னால் நலமாகச் சாமமொன்று அரைத்துக்
கொண்டு
சாடப்பா எண்ணையிலே கரைத்து விட்டு சதிராய்க் கொதிக்கையிலே யெருக்கன் பால் நா
கோடப்பா கொடிக் கள்ளி சதிரக் கள்ளி குணமான யிலைக் கள்ளிப் பாலுங் கூட்டே

கூட்டலே திருகு கள்ளி நாகக்கள்ளி கூசாதே படர்ந்த கள்ளி முள்ளி கள்ளி
சாடலே பால் வகை தாளுமாக்கும் மற்றும் சாதகமா யெண்ணையிலே விட்டுக் கிண்டி
மூடலே கமலம் போல் தீயை யிட்டு முதிராமல் கொதிக்கையிலே கஸ்தூரி கேளு
சாடப்பா வஞ்சு பல முலைப்பாலில் தானரைத்துக் கரைத்திடு நீ யெண்ணையிலே வாரே

வாரப்பா பாலது தான் படி கால் வீதம் வளமான தேசிப் பால் படி தாலாகுஞ்
சேரப்பா காட்டெருமைப் பால் பலந்தான் திரமாக யெண்ணையிலே விட்டுக் காச்சி
யாரப்பா பச்சிலை நாலு போடு அப்பனே வெள்ளுள்ளி யரைத்துப் போடே
மூடப்பா மெழுகு பதமான போதே முக நறுகு புசித்து வடித்திடாயே.

வடித்ததொரு தயிலமதைப் பரணி தனிலடைத்து வாகான கோரோசனையுங் களஞ்சி
போட்டு
பிடித்திட்ட பதத்துக்கும் நாடி பேரான கறண்டி நிற்ற யெண்ணையுள்ளே கொள்ளத்
துடித்திட்ட சன்னி யெல்லாந்தலைந்து போகும் தடியான யிசிவுக்குத் தலையிலே போட
நடித்திட்ட நாடி யெல்லாம் யிறகலாகும் நலமில்லா யிசி வெல்லாம் நன்னமாமே.

நீரழிவுக்கு:-

அத்திப் பிஞ்சு பொடி நாழி, கிளிஞ்சித் தோல் பொடி நாழி, முகிள் விரிந்த தென்னம் பூ பாளை ஒன்று உலத்திப் பொடி பண்ணி ஏகத்துக்கு கலந்து தேனில் ஒரு களக் கொட்டிப் பிரமாணம் சாப்பிடவும். மரபடி குறுவை நெல்லரிசி நாழி நனைத்து மாவாக்கி கரைத்து அடுப்பில் வைத்துக் கூழாக்கி அதின் மேலந்த சமூலமும் உழக்குத் தாள் சூரியிலை காயவிரை தாள் புண்ணி முன் கூழில் தாவிக் கிண்டி அந்தக் களியில் நல்லெண்ணை வார்த்து தின்ன நீரழிவு தீரும்.

அரக்கெண்ணை தயிலம்:-

நல்லெண்ணை படி.உ, கொம்பரக்கு பலம்.5, திரிகடுகு பலம்.15, கிராம்பு விராகனிடை.5, சாதிக்காய் விராகனிடை.5, சாதிபத்திரி விராகனிடை.உ, சன்ன லவங்கப் பட்டை விராகனிடை.5, செவ்வள்ளிக் கொடி விராகனிடை.5, பூலாங் கிழங்கு விராகனிடை.5, கடுக்காய் விராகனிடை.5, தானிக்காய் விராகனிடை.5, தாளிசபத்திரி விராகனிடை.5, கோஷ்டம் விராகனிடை.5, அதிமதுரம் விராகனிடை.5, வங்காளப் பச்சை விராகனிடை.5, சடாமஞ்சி விராகனிடை.5 சித்தரத்தை விராகனிடை.5, சீரகம் விராகனிடை.5, கஸ்தூரி மஞ்சள் விராகனிடை.5, மரமஞ்சள் விராகனிடை.5, சந்தனம் விராகனிடை.உ, தேவதாரம் விராகனிடை.5, யேலம் விராகனிடை.5, வால்மிளகு விராகனிடை.5, கொத்தமல்லி விராகனிடை.10, கண்டதிப்பிலி விராகனிடை.5, நெல்லிமுள்ளி சேர்.க, வில்லவேர் பலம்.5, நன்னாரி வேர் பலம்.3, சித்தாமுட்டி வேர் பலம்.5, தாதவளை வேர் பலம்.5, அமுக்கிறு வேர் பலம்.3, சீந்திக் கொடி பலம்.5,

நாற்த்தம் பழம்.10 (செய் முறை முடிவு கூறப்படவில்லை. மேல் சொன்ன சரக்குக் கொண்டு பக்குவமறிந்து செய்து கொள்ளலாம் போலும்).

<u>அரக்கென்னைத் தயிலம்:-</u>

கொம்பரக்கு பலம்.10 நாலு படி தண்ணீர் விட்டு மூன்று படியாகக் காய்ச்சி மறுபடி மூன்று படி தண்ணீர் விட்டு இரண்டு படியாகக் காய்ச்சிக் கொண்டு பிறத்த அதில் நல்லெண்ணெ படி.உ, தயிர் பிரிந்த தண்ணீர் படி.உ, தேங்காய் பால் படி.உ, சந்தனக் கட்டைத் தூள் பலம்.5, செம்புளிச்சந் கட்டை பலம்.5, கலைமான்கொம்பு தூள் பலம்.5, ஏலம், சன்ன லவுங்கப் பட்டை, செண்பகப்பூ, கோஷ்டம், அதிமதுரம், சிறுநாகப்பூ, முந்திரிப் பழம், சாதிக்காய், சாதிபத்திரி, கூகைநீர், சீரகம், கல்நார், தற்கோலம், நெல்லி முள்ளி, சாத்திரவேதி, கடுகுரோகணி, தேவதாரம், அறணுகம், மரமஞ்சள், அரத்தை, சதகுப்பை, கிராம்பு, பெருங்குரும்பை, கோரோசினை, சித்தாமுட்டி பேமுட்டி வகைக்கு விராகனிடை.3, நன்னாரி துளசி, ஆதவளை, நெருஞ்சி, சிறுபுள்ளடி, வெட்டிவேர், விலாமிச்சை, சிறுகீரை, ஓரிலைத்தாமரை முக்காவேளை, முசுமுசுக்கை, சிறுகாஞ்சொறி, வில்வம் பாதிரி முன்னை வாகை பொன்முசுன்னி, ஞுமுள், அமுக்குறு வேர் வகைக்கு பலம்.5, வல்லாரையிலை, பனங்கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு, கோரைக் கிழங்கு, வெருகன் கிழங்கு, தாமரை வளையம், வகைக்கு பலம்.5, எல்லாம் இடித்து முன் நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொண்டு தலை முழுகவும். உசிலை, அரைப்பு முழுகவும். உள்ளுக்குக் கரண்டி சாப்பிடவும். மண்டலங் கொண்டால் இதுக்குதீரும் வியாதி அஸ்தி சுரம், ஈளை, இருமல், பித்த காசம், சரீரம் வத்திவது இவை யெல்லாந் தீரும். பத்தியம் கை வல்லிய மறிந்து கொள்ள வேண்டியது.

<u>பேதிக்கு நெய்:-</u>

வாளம் பலம்.உ, குமட்டி விரை பலம்.உ, தேங்காய் நெத்து.4, வளையலுப்பு பலம்.$\frac{1}{4}$, வெடியுப்பு பலம்.$\frac{1}{4}$, இந்துப்பு பலம்.$\frac{1}{4}$, கரியுப்பு பலம்.$\frac{1}{4}$, சவுட்டுப்பு பலம்.$\frac{1}{4}$ வீதம் போட்டு எண்ணெ யெரிக்கவும். இதுக்கு முறிவு பச்சைத் தண்ணீரும் மோருஞ் சோறும். அதஅஞ்*ஞ

<u>அதனப் பட்டால் வசம்பு கசாயம்:-</u>

லிங்க மாத்திரை: வளையலுப்பு பலம்.$\frac{1}{2}$, லிங்கம் பலம்.$\frac{1}{2}$, பூண்டு தயிலம் விட்டு அரைத்து உருண்டை உருட்டவும்.
<u>சுளி கணம்</u>:- வாதபட்டை உசிலம் பட்டை பூண்டு வசம்பு கசாயமிட்டுக் கொடுக்கவும்.

(இனி வேறு நூல்) தன் மந்திரி வயித்தியம். இதன் கண் முன்னுள்ள காடி லெட்சணம் முதலியனவும், பின்னுள்ள வாதம், யோகம் முதலியனவும் விடுத்து இடையில் உள்ள மருந்து முறைகள் மட்டும் பிரதி செய்யப் பட்டுள்ளன.)

<u>சன்னி மாத்திரை:-</u>

1. அப்பனே சன்னியுட மாத்திரை தான் கேளு மேலான முத்தமொடு வெடியுப்போடு
   மேன் மேலும் பூரமுடன் கெவுரி கூட்டே.

2. கூட்டப்பா அதிமதுரம் அக்கிராகாரம் குணமான கஞ்சாவும் கற்கடகசிங்கி
   வாட்டப்பா முச்சறக்குஞ் சுத்தியே வளமான மருந்திதல்லாம் கல்வத்திட்டு
   காட்டப்பா யெலுமிச்சம் பழச் சாறு சாமம் கனமான யிஞ்சிச் சா.றீ சாமம் நாலு
   நாட்டப்பா முலைப் பாலில் சாமமாட்டு அப்பனே ஆட்டின பின் மாத்திரை தான்
   செய்யே.

3. செய்யவே யிதக் கெல்லாம் முப்பூ போட்டுசெயமான பூப் போட்டால் சரக்கெல்லா
   கொல்லும்
   வையப்பா ஒருரைப்பு தேனில் கொள்ள வளமான சன்னி பதிமூன்றும் போகும்
   மெய்யப்பா அருபான மறிந்து கொள்ளு மைந்தனே விஷ சன்னி தோஷம் போகும்
   கைய்யப்பா யென்னையுந் தான் வயித்தியஞ் சொன்னேன் கருதிய தோரெனைப் போ
   வயித்தியஞ் சொல்லாரே.

4. வானென்ன மாத்திரைகளிதற் கீடல்ல வளமான வயித்தியரே யுங்களுக்கு
   நானென்ற ஆணவத்தால் சொல்லிப் போட்டேன் நலமான கருக்கனெல்லா மிதிலே
   சொல்லேன்
   வானென்ற மேகமது யிருபத்தொன்றும் அப்பனே மேகத்தா லெடுத்த ரோகம்
   தாமென்ற சயமெட்டும் நீரளிவு யெட்டும் தாக்கான சூலையது பதினெட்டாமே.

<u>மேக ராசாங்க.எண்ணை:-</u>

5. ஆமப்பா மேகத்தா லெடுத்த ரோகம் ஆனதொரு வியாதியைத் தான் சொல்லப் போமே
   காமப்பா மேகராஙகத் தெண்ணை கருவாகச் சொல்லுகிறேன் கேளு கேளு
   வாமப்பா கருங்கையான் சாறு படி ஒன்று வளமான சங்குச் சாறு படி தாமென்று
   காமப்பா கரு நொச்சி சாறு படி தாமென்று கனமான செவ்வறளிச் சாறு படி
   தாமென்று.

6. ஒன்றான கோவைச் சாற்படி தானென்று உத்தமனே நெல்லிக்காய்ச் சாறு படி தானென்று
கன்றான கருப்பஞ் சாற் படி தானென்று கனமான ஆவாரஞ் சாற் படி தானென்று
அன்றான அகத்திப் பால் படி தானென்று அப்பனே அரைக்கீரைச் சாற் படி தானென்றே.

7. ஒன்றான அரளிப் பூச் சாற் படி தானென்று உத்தமனே மெரிச் சாற் படி தானென்று
கன்றான கள்ளி முலைப்பால் படி தானென்று கனமான வெள்ளாட்டின் பால் படி தானென்று
வன்றான ஆவின் பால் படி தானென்று வளமான தென்னங் காய்ச் சாறு படி தானென்று
நன்றான வுருவிச் சாற் படி தானென்று நலமான அவுரிச் சாற் படி தானென்று,

8. ஒன்றான கழுதைப் பால் படி தானென்று உத்தமனே சித்தேரண்டத் தெண்ணை படி ரெண்டு
வன்றப்பா யெள்ளெண்ணை படி தானென்று வளமான கற்க வகை சொல்லக் கேளு
அன்றப்பா திரிகடுகு திரிபலாதி ஆனதொரு யேலமுடன் கிராம்பு பத்திரி
நன்றப்பா வெட்டி வேர் விலாமிச்சோடு நாதாந்த சந்தனத் தோடே தேவதாரம் தாலே.

9. தானான யிவை யெல்லாம் தேங்காய்ப் பாலில் தனதாக அரைத்தெண்ணை அதில் கரைத்து
வேறான சாறுடன் பால் யெண்ணை யொன்றாய் வேதாந்த சட்டி தனில் கலக்கி கொண்டு
வானான அடுப்பேத்தித் தீயை மூட்டி வளமான சாமமது பனிரெண்டப்பா
கானான சாமமது எரித்துக் கொண்டு கனகமதா யிறக்கியதைப் பதத்தில் வைய்யே.

10. வைய்யப்பா யெண்ணை தனை வடித்துக் கொண்டு வளமான வயிரவர்க்குப் பூசை பண்ணித்
கைய்யப்பா கறண்டி நிறை நாற்பது நாள் கொள்ளு கனமான மேகங்கள் தவண்டே போம்
மையப்பா வாத சயம் பித்த சய மெல்லாம் மகத்தான சேற்றம சய மெல்லாம்
நையப்பா கற்ம வினை மேக ரோகம் நலமாகப் பயந்து விடும் காம நோய்களே.

11. வாத ராசாங்க யெண்ணை :-
நோயான வகை யேது காமத்தாலே நொறுங்கியே வந்ததப்பா வுடலுக்குள்ளே
வாயான வாத ராசாங்கம் கேளு வளமான யெண்ணையப்பா யார் தான் சொல்வார்
நாயான உள்ளபடி நான் தான் சொல்வேன் நலமான அறிவாலே கண்டு செய்வாய்
காயான கனி பளம் போல் யென்றாலப்பா கருவான யிருநாத்தில் சொல்வேன் பாரே.

12. பாரப்பா கண்டங் கத்திரிச் சாற் படி தானென்று கருவான வாகைச் சாற் படி தானென்று
-- கனமான மாவிலிங்கு படி யரை தானப்பா
ஆரப்பா கொள்ளறைச் சாற் படி தானென்று அப்பனே வெள்ளறுகுச் சாற் படி தானென்று
நாரப்பா வாத நாராயணன் மூலிச் சாற் நலமாகப் படி யொன்று கூடச் சேரே.

13. சேரப்பா யிதனுடன் கலக்கிக் கொண்டு செயமான வெள்ளாட்டின் பால்தான் விட்டு
நாரப்பா கற்க வகை சொல்லக் கேளு நலமாக முருங்கை வேர் சங்கம் வேரும்
ஆரப்பா கொடிவேலி வேருங் கூட்டு அப்பனே வெள்ளறுகு வேருங் கூட்டு
அம்மனே*இலைக்கருக்கு*வேருங் காரப்பா திப்பிலியுஞ் சுக்கு ஓமம் கருவான கரிய சீரகமுங் கூட்டே.

14. கூட்டப்பா கிரும்புடனே எலம் பத்திரிகருவான வகைக்கு வகை விராகன் ரெண்டு
வாட்டப்பா முன் கற்க் வகைக்கு மைந்தா வளமாகப் பல மரைதான் கல்வத் திட்டு
ஆட்டப்பா வேர் வகை கடைச் சரக்கு யெல்லாம் அப்பனே வெள்ளாட்டின் பாலவாட்டு
நாட்டப்பா சித்தேரண்டத் தெண்ணை படி யொன்று நலமான சாறுடனே கற்க மொன்றாய்ச் சேரே.

15. சேரப்பா சட்டி தனில் வாத்துக் கொண்டு செயமான கற்கத்தை வறுத்துக் கொண்டு
வாரப்பா அடுப்பேத்திச் சாம மஞ்சு வளமாக வெந்து கடுதிரமாம் பாரு
ஆமப்பா மெழுகு பதந் தனில் வடித்து அப்பனே வயிரவர்க்குப் பூசை பண்ணு
சாரப்பா யெண்ணையைத் தான் காசிடை தான் கொள்ளு கனமான வாத மெண்பதுந் தான் போமே.

16. போமப்பா மண்டலந்தான் கொள்ளு கொள்ளு புகையாகா பத்தியந் தான் காரு
வாமப்பா வாத மென்பதிலுல் வந்த வல் வினைகள் சொல்லுகிறேன் வளமாய் கேளு
காமப்பா மண்டை குத்து கபத்தி சிவு பிடரி கனமான பின்னிசிவு வுதடி சிவு வாய்வு
லாமப்பா முகவாதம் சன்னி வாதம் வளமான கழலண்ட வாதம் பாரே.

17. பாரப்பா நடுக்கு முதல் வாதந் தீரும் பரிவான யிடுப்பு வாதம் பறந்து போகும்
ஆரப்பா கை காலில் மிதிரு வாதம் வாய்வு அப்பனே கால் முடக்குக் கை முடக்குத்
தீரும்
பாரப்பா யென்பதினுல் வந்ததெல்லாம் வளமாகப் யெட்டுபொடியாய் பறந்து போகும்
நாரப்பா யிந்த யென்னை பத்தியமாய்க் காரு நலமாக யிதன் திடமுங் குணத்தை பா
ரே.

18. பாரான நடுக்கு வாதம் முடக்கு வாதம் தீரப் பரிவான தயிலமொன்று சொல்லக் கேளு
ஆன யென்னையது கால் படி தான் வாரு அப்பனே வான் நெய்யது கால் படி தான்
கூட்டு
வாருன தில்லைப்பால் படி அரக்கால் வளமான முருங்கை வேர் சாறு படி யரைக்கா
நாருன கற்க வகை சொல்லக் கேளு நலமான யிந்தப்புக் கரியுப்பாச்சே.

புங்கம்_வித்து_தயிலம்:-

19. நவிலுவேன் யின்னமொரு தயிலங் கேளு நலமான புங்கன் வித்துத் தயிலஞ் சொல்வேன்
அவிலவே புங்கம் வித்து படி தானெட்டு அப்பனே அழிஞ்சி வித்து படி தானென்று
நவிலவே முல்லை வேர் வீசை ரெண்டு நலமான குமரிக் கிழங்கு வீசை யெட்டு
மவிலவே யிது வெல்லாம் பாண்டத்திட்டு மகத்தான குளித் தயிலம் தன்னை வாங்கே.

20. வாங்கியே உள்ளுக்குக் கடுகளவு யீய வளமாக மேலுக்கும் பூசுவாய் நீ
பார்க்கவே நரை திரை களித்த நாலாப் போகும் அப்பனே காயமது யிளகிப் போகு
நாங்கவே பாண்டுடனே மேகம் போகும் நலமாக யிந்த யெண்ணெய் மிரலெப் போகும்
சாங்கவே யின்னமொரு தயிலங் கேளு சமத்தான அருகம் வேர்த் தயிலங் கேளே.

அருகம்_வேர்த்_தயிலம்:-

21. கேளப்பா அருகம் வேர் வீசை யெட்டு கெடியான முத்தமது வீசை யெட்டு
ஆளப்பா புங்கம் வேர் வீசை யெட்டு அப்பனே யிது வெல்லாம் பாண்டத்திட்டு
வாளப்பா குளித் தயிலந் தன்னை வாங்கி வளமாகத் தயிலத்தைப் பதனம் பண்ணு
நாளப்பா வுள்ளுக்கு காசிடை தான் கொள்ளு நலமாகச் சிரசுக்கு முழுகுவாயே.

22. முழுகிடவே தீருமது பித்த பாண்டு முக்கியமுள்ள பித்த வெட்டை பித்த சூடு
அழுகிடவே யுடம் பெரிவு கை கால் காந்தல் அப்பனே நெஞ்செரிவு முக்கெரிச்சல்
பழகிடவே கபாலத்தில் மண்டை குத்தல் பரமான அக்கினியா மந்தந் தீரும்
வழுகிடவே புளி புகையு மாகாதப்பா வளமான பத்தியத்தைச் சேவையாய் செய்யே.

23. ரெணத்துக்குத்_தயிலம்:-

செய்யவே யாருத ரெணத்துக்கப்பா செயமான தயிலமொன்று சொல்லக் கேளு
வைய்யப்பா சங்கம் வேர் வீசை ரெண்டு வளமான புவரசம் பட்டை வீசை ரெண்டு
கனமான ** [illegible] * [illegible] * [illegible] *
கையப்பா சிவனூர் வேம்பு வீசை ரெண்டு கனமான வாதமுடக்கு வீசை ரெண்டு
நய்யப்பா யிது வெல்லாம் நறுக்கிக் கொண்டு நலமாகப் பாண்டத்தில் போட்டிடாயே

24. போட்டப்பா குளித் தயிலந் தன்னை வாங்கி குணமான சீசாவில் பதனம் பண்ணு
ஆட்டப்பா வுள்ளுக்கு மவிதற்கீய அடவுடனே புண் புரைகள் ஆறும் புண்ணும்
வாடப்பா பதினெட்டில் பிறந்த ரேகம் வளமாகப் பறந்து விடும் ஓடிப் போகும்
நாட்டப்பா ரெணத்தின் மேல் தயிலம் போடு நலமாகப் பறந்து விடும் ரணங்கள்
தானே

25. சயத்துக்கு_தயிலம்:-

தாலுன ரணத்துக்குத் தயிலம் சொன்னேன் தருவான சயத்துக்குத் தயிலங் கேளு
தேலுன செம்முள்ளி வேர் வீசை ரெண்டு செயமான சங்கம் வேர் வீசை ரெண்டு
ஆறுன ஆடாதோடை மூலி வேரும் அப்பனே வீசையது ரெண்டு கூட்டு
வாலுன யிது மூன்றும் குளித் தயிலம் வாங்கி வளமான தயிலத்தை பதனம் பண்ணே.

26. பண்ணப்பா பணவிடை தான் கொள்ளச் சொல்லு பரிவாக யிருபோது வுள்ளுக்கேத்து
சண்ணப்பா சஞ்சார சேத்தும ரோகம் சமத்தான யிளைப்போடு சுவாச காசம்
மண்ணப்பா மண்ணப்பா மாண்டு விடும் யிருமல் ரெத்தம் மகத்தான கொரு கொருப்பு
மேல் சுவாசம்
கண்ணப்பா கண் காசுகோடிப் போகும் கனமான மேகத்தா லெழுந்த தாச்சே.

27. மூலச்_சூட்டுக்கு_தயிலம்:-

ஆச்சப்பா சயத்தினிட தயிலஞ் சொன்னேன் அப்பனே மூலச் சூடெல்லாம் போக
வாச்சப்பா தயில மொன்று சொல்லக் கேளு வளமான தயிலமடா ஆரும் சொல்லா

...ச்சப்பா மிளகறணி முள் கத்தாரி மகத்தான தென்னம் வேர் பனையின் வேரும்
...ச்சப்பா கையாறந் கொருஞ்சி வேரும் கனமான யிலந்தை வேர் மூ---லவேரே.

28. வேரப்பா சித்தாமுட்டி கீழ்காய் நெல்லி வேதாந்த நெல்லிப்பட்டை யானைப்பட்டை
கேளப்பா யிவ வெல்லாம் வீசை யொன்று கனமாகப் பாண்டத்திலிட்டுக் கொண்டு
வாரப்பா ஒளித் தயிலம் தன்னை வாங்கி அப்பனே அடக்கமதாய் பதனம் பண்ணு
வாரப்பா மனிதருக்கும் காசிடை தானீந்தால் வளமான மூல மெல்லாம் பறந்து போ
குமே.

29. <u>வாதத்துக்குச் சூரணம்</u>:-

போமப்பா புடத் தயிலம் பெருமை சொன்னேன் புகழான சூரணத்தின் மகிமை கேரு
ஆமப்பா வாத மெல்லா மொளிந்து போம் அப்பனே சூரணந் தானென்று சொல்வேன்
வாமப்பா கொன்றை யொடு மாவிலிங்கம் வளமான கொடிவேலி கண்டங்காரி
காமப்பா வாதத்தின் கரப்பன் பட்டை கனமான ஆவரை சங்கம் வேரே.

30. வேரான வெள்ளருகு வேருங் கூட்டு விதமான யிவ வகைக்கு பலந்தானைந்து
ஆுன புன்முடனே காயம்சுக்கு அப்பனே யிந்துப்பு வளையலுப்பு
காுன கம்பியுப்புக் கல்லுப் போட்டே கனமான வுப் பெல்லாம் சுத்தி செய்து
வானன வேரெல்லாம் கல்லுரலில் ஆளாய் வளமான கடைச் சரக்குந் தாளாய்
பன்னே.

31. பன்னவே ரெண்டு மொன்றாய்க் கலந்து கொண்டு பன்பான சூரணத்தைப் பதனம் பண்ணு
நன்னவே வெருகிடை தானுள்ளுக் கேத்து கனமான வாதத்தில் வந்த பீடை எ
ன்னவே சூரணத்தைக் கண்டபோதே அப்பனே கண் காணதோடிப் போகும்
வன்னவே வாதத்தின் சூரணந் தான் சொன்னேன் வளமான சயத்துக்கு சூரணந்தான்
கேளே..

32. கேளப்பா செம்முள்ளி ஆடாதோடை கெடியான சங்கோடு கீள்காய் நெல்லி வேரும்
வாளப்பா திரிகடுகு யேலத்தோடு வளமான கண்டங்கத்திரி யரத்தை
நாளப்பா கடுக்காயும் சித்திர மூலம் நலமான கையாந் தாளிசந் தான்
ஆளப்பா யிவ வெல்லாம் பலந்தானென்று அப்பனே கல்லுரலில் ஆளதாக்கே.

33. தாக்கென்ன சூரணத்தை வடித்துக் கொண்டு தனதாகச் சீனியதில் மூன்று சேரு
வாக்கென்ற குதமொடு தானகந்தான் வளமான பற்பத்தி னெருவாளும்
நாக்கென்ற பணவிடை தான் வைத்துக் கொள்ளு நல் வினை மந்தார காசம்
சயமும் போகும்
ஆக்கென்ற பத்தியம் புளி புகை பெண்ணுந் தள்ளு அப்பனே அரைக்கரை துவரைதானே.

34. தானுன கடல் மச்சம் வத்தல் கூட்டு தனதான மற்றதெல்லா மாகாதப்பா
வேனுன யின்னமொரு சூரணந்தான் கேள் வேதாந்த தாளிச பத்திர் சூரணந்தால் சொல்
வேன்
தானுன பலமே மொகுறு தாளிசந்தான் தருவான திரிகடுகு திரிபலாதி
யானுன யேலமொடு கிராம்பு பத்திரி அப்பனே யிவ வெல்லாம் பலமரைதான் கூட்டே.

35. <u>தாளிச பத்திரி சூரணம்</u>:-

கூட்டவே யிடித்ததனை வடித்துக் கொண்டு கூருகச் சீனியதில் பலமுமெட்டு
வாட்டவே வெருகடி தானுள்ளே கொள்ளு மூலத்தில் கடுப்பு முதல் காங்கை ரெத்தம்
மாட்டவே வேகமொடு உள் மூலக் கடுப்பு மகத்தான வறட்சி யொடு ரெத்தப்பாடு
நாட்டவே நீர்க் கடுப்புக் கல்லடைப்பு வோடும் நலமாக மேக வெள்ளை பறந்து
போமே.

<u>பித்த சூரணம்</u>:-

36. போமப்பா யின்னமொரு சூரணந்தான் சொல்வேன் புகழான பித்தத்தின் சூரணந்தான்
வாமப்பா ஆவரையின் பட்டை வேரும் வளமான ஓரிலைத் தாமரை கீழ்காய் நெல்லி
ஆமப்பா கவிழம் வேர் சித்தாமுட்டி அப்பனே யிலவின் வேர் வேலிப் பத்திரி
காமப்பா நரிப் பயறும் நன்னாரி வேரும் கனமான விலாமிச்சம் வேருங் கூட்டே.

37. கூட்டடா வெட்டிவேர் வேருங் கூட்டு கூுன யிவ வகைக்குப் பலந்தான் ரெண்டு
ஆட்டடா கடுக்காய மேல மாந்சி அப்பனே சந்தனந் தான் தேவதாரம்
வாட்டடா யிவவெல்லாம் பலமரை தான் கூட்டி வளமாக யிடித்ததனை வடித்துக் கொண்டு
காட்டடா சீனியுடன் சீரகமுங் கூட்டு காசினியிலாரி தார மகிமை தானே.

38. தானுவ சூரணத்தை யிருபோதுண்ணு தனதான பித்தெரிவுங் கண் புகைச்சல்
நானுன பித்தத் தாலெழுந்த தெல்லாம் நலமாகும் மாண்டு விடும் சத்தியம் சொன்னேன்
கானுன பீனிசங்கள் யெல்லாம் தீர கனமான சூரணந் தானென்று கேரு
மானுன கடுக்காயும் கடுகுரோகணியும் மகத்தான செண்பகப் பெரு மருந்துதானே.

39. <u>பீனிசத்துக்கு சூரணம்</u>:-

தானென்ற திரிகடுகு செங்கத்தாரி கனமானகொடிவேலி கண்டங்கத்திரி
வேனென்ற சங்கம் வேர் சீரகந் தான் ரெண்டும் விதமான யிவ வெல்லாம் பலமொன்றாக

கோவென்ற கல்லுரலி லிடித்துக் கொண்டு ஞானமாகப் பொடியதனை வடிதான் கட்டி
நானென்ற நானென்ற வெருகடி தானிரு போதன்னு நலமாக யேழு நாள் கொள்ளு

40. கொள்ளப்பா பீனிசங்கள் ஒன்றமில்லை கொடி தான நாசி ரெத்தம் நாசி நாத்
விள்ளப்பா வுடம்பெல்லாம் தினவு குடைச்சல் விதமான பொருமலுடன் யிரைப்பு விக்கல்
கள்ளப்பா காகிறள்ளே சீழ் வடிதல் கனமான பீனிசங்களெல்லாம் போகும்
அள்ளப்பா பீனிசத்தின் சூரணந்தான் சொன்னேன் அப்பனே யின்னமொன்று அருளுறேனே

41. __நவ மூலத்துக்குச் சூரணம்__:-

அருளுறேன் மூலமொன்பதுந் தான் போக அன்பான சண்ட மாதை சூரணந்தான்
மருளுறேன் கொடிவேலி சுக்குங் கட்டி வளமான மிளகறனை முத்தக் காசு
கருளவே கடுக்காயும் கடுக்காய்ப் பவுங் கனமான புளியிரை சித்தரத்தை
மருளவே குன்றுமப்பு சாதிக்காயும் மகத்தான பிறண்டையொடு கொளிஞ்சி வேரே.

42. வேரான கொன்னை வேரும் வாங்கி வேதாந்த பச்சையொடு மாம் வேர்பட்டை
ஆறுவ யிதெல்லாம் உலத்தித் தாள் தாய் அப்பனே வகை வகைக்குப் பலமும் ரெண்டு
சாறுன விதமெல்லாம் யெடுத்துக் கொண்டு வளமாகச் சீனியதில் கலந்து கொள்ளு
நாறுன யிரு போது மண்டலந் தான் கொள்ளு நலமான மூலங்களோடிப் போமே.

__வல்லாரை கிருதம்__:-

43. போமப்பா சூரணத்தின் மகத்துவஞ் சொன்னேன் புகளான கிருதத்தின்படலைக் கேளு
ஊமப்பா வல்லாரைக் கிருதந் தான் கேளு வளமான வல்லாரைச் சாறு படி யொன்று
~~நலமான-கேளலைக்-சாத்-படி-தானென்ற-காமப்பா~~
நாமப்பா ஆவரையின் சாறு படி யொன்று நலமான சோலைச் சாறு படி தானென்று
காமப்பா தக்காளிச் சாறு படி யொன்று கனமான ஆவின் நெய் படி தானென்றே.

44. ஒன்றுன ஆவின் நெய் படி காலென்று உத்தமனே கற்க வகை சொல்லக் கேளு
நன்றுன திரி பலையும் சாதிக்காயும் கிரும்பு நலமான இவின் பால் விட்டு ஆட்டி
வண்டான நெய்தனிலே கலக்கிக் கொண்டு வளமாக அடுப்பேத்தித் தீயை மூட்டி
கண்டான நீர் சுண்டிய் கிருதமாகும் கனமான சர்க்கரை தான் பல மெட்டுப் போடே

45. போடப்பா அடி பத்தாமல் கிண்டி வா நீ புகழான கிருதத்தைப் பதனம் பண்ணு
வாடப்பா புசித்து மனிதற் கெல்லாம் வளமாகக் கறண்டி நிறை யிரு போதுன்னு
ஊடப்பா மேக மொடு கிரந்தி யூறல் அப்பனே சொரி சிரங்கு வெள்ளை ரெத்தம்
நாமப்பா சதையடைப்பு நீர்க் கட்டெல்லாம் நலமாக ஓடி விடும் நலி லொன்றுதே.

48. (இடையில் உள்ளஏடுகள் சிதைந்திருக்கின்றன)

46. __பித்தத்துக்குக் கசாயம்__:-

தாவென்ற மாத்திரை களதுபானமாக சான்ய நோயெல்லாம் தவண்டே போம்
வாளப்பா யின்னமொரு கசாயஞ் சொல்வேன் வளமான கசாயந் தான் மெத்த நன்று
வாளப்பா அக்கியுடன் வுதியம் பட்டை அப்பனே சித்தாமுட்டி பேராமுட்டி
காளப்பா வில்வவேர் நெல்லி யீர்க்கு கனமான நாய்த் துளசி யிலையின் வேரே.

47. வேரப்பா நெருஞ்சி வேர் நெல்ப் பொரியுங் கட்டு வேதாந்த ஒரிலைத் தாமரை
தீம்காய் நெல்லி
நாரப்பா அவரையின் வேருங் கட்டு நலமான கானியுடன் சீரகந்தான்
ஆரப்பா சீரகத்தைப் பொரிய வைத்து அப்பனே மருந்தெல்லா மெடுத்துப் போட்டு
காரப்பா தண்ணீர் படி முக்கால் விட்டு கனமான தீ யெரித்து யெட்டொன்றுக்கே.

48. ஆக்கப்பா சிங்கி பற்பம் போட்டுக் கொண்டு ஆனதொரு மேலெரிவு கை கால் காந்
தல்
வாக்கப்பா நெஞ்செரிவு போகும் வளமான கண்ணெரிச்சல் மண்டைக் காந்தல்
சாக்கப்பா சஞ் ரார பித்த நோய்கள் சமத்தான நோயெல்லா மகன்று போகும்
நாக்கப்பா நந்தி சரருளிலுலே நலமாகப் போகுமடா நவின்றிட்டேனே.

49. __சன்னி முதலானதுக்கு ஆக்கிரனப் பொடி__:-

கேளப்பா ஆக்கிரனம் மகிமை சொல்வேன் யென் மகனே யென்னைப் போலவர் தான்
சொல்வார்
வாளப்பா தும்பை வேர் மிளகு கட்டி வளமான முருங்கை வேர் பளம் புன்னுக்கு
ஆளப்பா யிது வெல்லா முனத்திக் கொண்டு அப்பனே பலமொன்று ஆக்கி வாங்கி
நாளப்பா ஆள் பன்னிக் கட்டிக் கொண்டு நலமாகப் பறனிதனில் பதனம் பண்ணே.

50. பண்ணப்பா புசித்துச் சன்னி நோய்க்கு பணவிடை அள் தானெடுத்து குறையிற் ஊடு
அன்னப்பா சன்னி தோஷம் நாவறச்சி போகும் அப்பனே குளிருடனே தலை நோவு
காச்சல்
கன்னப்பா விக்கலை விட்டோடிப் போகும் கனமான பீடைகளெல்லாம் போகும்
மன்னப்பா ஆக்கிரன மறைப்போ யில்லை மகத்தான வயித்தியரே மகிழ்ந்து பாரே.

<u>வல்லாரை கற்பம்:-</u>

பாரப்பா கற்பத்தின் மகிமை கேளு பண்பான வல்லாரை கொடி மூலம் வாங்கி
சேரப்பா சுத்தி செய்து உலர்த்திக் கொண்டு செயமான கல்லுரலில் தூளாய்ப் பண்ணி
வாரப்பா கறண்டி நிறை பூரணத்தை வளமான தாசி நீர் தன்னிற் கொள்ளு
ஆரப்பா மேக நீரோடு யமுத மூன்றும் அப்பனே சான் வயறு தீர்ந்து போமே.

<u>வங்க பற்பம்:-</u>

52. பாரப்பா வங்க பற்பம் சொல்லக் கேளு பண்பான நாதாக்கள் மறைத்தாரய்யா
ஆரப்பா வங்கமது பலந்தானெட்டு அப்பனே சுத்த சிலத்துருக்கிச் சாய்ப்பாய்
வாரப்பா அஞ்சு தரம் உருக்கிச் சாய்க்க வளமான வங்கமது வெள்ளி வட்டாம்
வாரப்பா முன் சொன்ன வேம்பு தயிலம் நலமான அதில் முப்பு போட்டுக் கொள்ளே.

53. கேளப்பா ஆட்டி வர மெழுகு போலாம் கெடியாக அக்கவசம் மெழுகைப் போடு
வாளப்பா விந்ததிலே கவசம் போடு வளமான மஞ்சீலை யேழும் போடு
நாளப்பா ரவி புலத்திக் காயப் போடு நலமான முப்பத்திரெண்டு எருவில் போடு
ஆளப்பா ஆறித் தாமதிக்காப் போலே வெள்ளை போட்டெடுத்து மண் கவசம் தன்னை வாங்கே.

54. வாங்கப்பா மெழுகதுவும் கருகி நிற்கும் வளமான வங்கமது நிறைக் கொள்ள
சாங்கப்பா சயிம் காசமும் பீளை ரெத்தம் சண்டாள சயமெட்டும் சாந்தமாகும்
நாங்கப்பா வெண்ணை நெய் பால் பணவிடை தான் கொள்ள நலமான மேக பிரபத்திரெண்டும் போமே.

55. போமப்பா அருபான மரிந்த கொள்ளப் புகழான சூலை பதினெட்டும் போகும்
ஆமப்பா பீனிசங்கள் கபால குடு அப்பனே நோய்களது அகலும் பாரு
காமப்பா தாம்பரத்தின் வெள்ளை கேளு கனமான தாம்பரமோ பலமோ அஞ்சு
நாமப்பா சாச்சியதை லூசி நீர் தன்னில் நலமாகப் பனிரெண்டுகிரந் தான் நோயே.

<u>தாம்பிர பற்பம்:-</u>

56. தோயப்பா செம்பிட்டு களிம்பு போக்கு ஐய்ய நிறமான தொரு செம்பைத் தாகும்
நாமப்பா முப்பு சுண்ணம் காரம் கொண்டு அப்பனே கல்வத்தில் பலம் ரெண்டிட்டு
நெய்யப்பா அண்ட நீர் தன்னிலாட்டு நலமான மெழுகது போலாகும் பாரு
மெய்யப்பா வழித்தெடுத்த செப்பின் மேல் பூசி மகத்தான ரவி தனிலே சாமம் வையே.

57. வைய்யப்பா கிடுகிடென்ற நடுங்கிச் சாகும் வளமான செம்பதின் மேல் யேழுசீலை
கைய்யப்பா பிலாச மரந் தோண்டிக் கொண்டு கனமான செம்பை வத்தாப் படித்து
நெய்யப்பா வதின் மேலே மண்ணும் செய்து நலமாகப் புடம் போட்டு எடுத்துப் பாரு
மெய்யப்பா வெள்ளை நிறம் யென்ன சொல்வேன் மேன்மையுள்ள பற்பத்தை பதனம் பண்ணே.

58. பன்பான பாவி கர்மம் பாசிகள்க்கு பண்பான அதியானவுடன் வியாளன் கூடில்
அன்னப்பா ஆனைக் கால் வியாதியாகும் அப்பனே அவர் செய்த பாவரோகம்
கன்னப்பா நாற்பது நாள் பற்பங் கொள்ள கனமான அருபான மரிந்த கொள்ளு
வின்னப்பா உன்னை விட்டோடிப் போகும் வேதாந்த பற்பத்தின் மகத்துவம் நீகாணே.

59. கேளப்பா செந்தூரம் மகிமை கேளு கெடியான ரசத்திட செந்தூரங் கேளு
விள்ளப்பா வாலை ரசம் பலந்தான் ரெண்டு வேதாந்தக் கல்வமதில் விட்டுக் கொண்டு
மெள்ளப்பா பஞ்ச மலம் கொஞ்சம் போட்டு மேலான விந்து நீர் சாமமாட்டு
அள்ளப்பா மெழுகது போலாகும் பா அப்பனே வழித்தெடுத்து வில்லை பண்ணே

60. பன்னப்பா புளிய தழல் குகையும் பண்ணி பண்பான வில்லையைத் தான் உள்ளே வைத்து
அன்னப்பா மேல் மூகை தான் கொண்டு மூடி அப்பனே மண் சீலை யேழுஞ் செய்து
கண்ணப்பா ரவி தனிலே வைத்திட்டாக்கால் கண் மணியே வெங்கலம் போல் காய்ந்து போகும்
வன்னப்பா பத்தெருவில் புடத்தைப் போடு வளமான அருணன் போல் செந்தூரமாமே.

61. ஆமப்பா செந்தூரம் பதனம் பண்ணு அப்பனே பணவிடை தானிரு போதுண்ண
ஓமப்பா பித்த சூலை மண்டலத்தில் போகும் வளமான வாதசூலை சேத்தும சூலை
நாளப்பா செல்லாத சூலைகட்டு நலமான சூலையது காமம் வியாதி
காமப்பா கர்ம நோய் ரணங்கள் சூலை கனமான செந்தூரங் கொண்டால் போமே.

62. <u>காந்த செந்தூரம்:-</u>

போமப்பா காந்த செந்தூரங் கேளு புகழான காந்தமது பலந்தான் ரெண்டு
நாமப்பா கெந்தியக பலந் தானென்று நலமான வீரமது பலந்தானென்று
ஓமப்பா மிது மூன்றுங் கல்வத்திட்டு வளமான முப்புவும் களஞ்சி கூட்டு
ஆமப்பா---ளம் பூச் சாத்தால் சாமம் அப்பனே கையான் சார் சாமம் ரெண்டே.

63. ரெண்டான சாமமது மூன்று மாட்டி ரேசக பூரகமுடனே வில்லை செய்து
வண்டான சீலையது மூன்று போட்டு வளமான கெசபுடத்தில் போட்டுத் தீரு
நன்றான செந்தூர முருக்கம் பூப் போல் நலமாக நீறியது செந்தூரமாகும்
அண்டான செந்தூரம் பணவிடை தான் கொள்ளு அனேக மாங் கற்மத்தால் வந்த
பாண்டே.

<u>கெந்தி செந்தூரம்:-</u>

64. பாண்டான பாண்டெல்லா மோடிப் போகும் பண்பான பாண்டுவட்டா எல்லாம் போகும்
ஆண்டான கெந்தியுட செந்தூரன் கேளு அப்பனே கெந்தியது பலந்தானொந்து
வண்டான வீரமுடன் பூரம் லிங்கம் வளமான யிது வெல்லாம் பலந்தான் வீதம்
கண்டான கல்வத்திலிது வெல்லாம் போட்டு கவமான முப்புளியில் கலஞ்சி போடே.

65. போடப்பா பொற்கையான் சாற்றிலாட்டிப் புகழான ஆவின் பால் சாமமாட்டு
ஆட்டப்பா முருக்கம் பூச் சாற்றால் சாமம் வளமாக ஆட்டுவாய் மெழுகு போலாம்
ஆமப்பா புளியாலே குகை தான் பண்ணி அப்பனே குகையைத் தான் உலர வைத்து
நாட்டப்பா கெந்தியிலிலை யதின் மேல் வைத்து நலமாக மேல் மந்தக் கையை
வைய்யே.

66. வைய்யப்பா மேல் குகை தான் கொண்டு மூடி வளமான மண் சீலை யேழு செய்து
கையப்பா காடை புடந் தன்னில் போடு கவமான செந்தூர மென்ன சொல்வேன்
நய்யப்பா நாதாந்த செந்தூரம் போல் நாடதிலே சித்தர் தான் சொல்லாரைய்
யா
மெய்யப்பா சொல்லி விட்டேன் விதியை மக்காள் மேதினியில் மாந்தர்களே செய்து
கொள்ளே.

67. கொள்ளப்பா மண்டலந் தான் கொண்டாயானால் குறை நோவு குட்டமுடன் சூலை
போகும்
விள்ளப்பா நரை திரைகளெல்லாம் போகும் விதமான காயத்துச் சுத்தியாகும்
அள்ளப்பா கட்டு வகை செய்ந்நீர் கேளு அப்பனே சொல்லுகிறேன் ஞானியாய்க் கேளு
நள்ளப்பா தலைப் பிண்டந் தன்னை வாங்கி நலமான கோரையுடன் வரம் போக்கே

(மேலுள்ள மருந்துகளல்லாத பிற செய்திகள் விடப்பட்டன)

****

முற்றும்

*****

சு.ச.21.3.64.

270